
# ஆலயமணி

ஆசிரியர் : புலவர் ஈழத்துச்சிவானந்தன்



போதொடு நீர் சுமந்து ஏத்தி
புகுவார் அவர்பின் புகுவேன்

7-00

தாயுநீயே தந்தைநீயே சங்கரனே அடியேன்
ஆயுநின்பால் அன்புசெய்வான் ஆதரிக்கின்ற துள்ளம்
ஆயமாய காயந்தன்னுள் ஐவர் நின்று ஒன்ற லொட்டார்
மாயமே யென்றஞ்சுகின்றேன் வலிவல மேயவனே.

—சம்பந்தர்


# GOPAL & SONS

23, K. K. S. Road,

JAFFNA.

# மணி ஓசை 5

*ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே......*

## யாழ் இந்துக் கல்லூரித் திருமுறை மாநாடும் இலங்கை இந்து இளைஞர் பேரவையின் வருடாந்த மாநாடும்

வைகாசித்திங்களின் வைப்பு நிதியங்களாக யாழ்ப்பாணத்தில் இரண்டு மாநாடுகள் நடந்து மக்கள் மனங்களில் ஏறி நின்றன. ஒன்று நூற்றாண்டுப் பெருமை பெற்று தமிழர் தம் தலைநிமிர் கழகமா. மிளிரும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடந்த திருமுறை மாநாடு மற்றையது இளந்தலைமுறையினரை சிவநெறிப் போக்குக்கு ஆற்றுப் படுத்தும் அரியபணியில் அயராது சேவை செய்யும் இலங்கை இந்து இளைஞர் பேரவையின் யாழ் மாவட்ட அமைப்பின் பத்தாவது மாநாடு. சைவக் காவலரான திருவார் திரு. ஆறுமுகநாவலர் பெரு மானின் எண்ணத்தின் வீச்சும் மூச்சும் இவ்விரு மாநாடுகளிலும் விரவி விளக்கங் கொண்டன.

இந்துக் கல்லூரித் திருமுறை மாநாட்டு முதல் நாள் நிகழ்ச்சியில் திருமுறைச் சுவடிகளை உயிர்யானைமேல் ஏற்றி வண்ணைச் சிவன் கோவி லிலிருந்து ஊர்வலமாக கல்லூரியின் குமாரசாமி மண்டபத்திற்கு ஏந்தி வந்தார்கள். வரும் வழியில் காங்கேசன்துறை வீதியிலே கோயில் கொண்டிருக்கும் விநாயகர் ஆலயத்திற்கு முன்பாக வந்ததும் வர்ண பகவானின் ஆசீர்வாதம் குளிர் நீராய்க் கொட்டியது. திரு முறை காட்டிய பிள்ளையார் திருமுறை விழாவிற்கு தனது அருளா சியை வழங்கியமை சிவசகுனமாய் சுபமுகூர்த்தமாய் தமிழுக்கும் சைவத்துக்கும் நீர் வார்க்கும் நிகழ்வாய் அமைந்தது. ஊர்வலத்தில் வந்தோருக்கு பக்தி நெறியின் அருமையும் பெருமையும் பிரத்தியட் சப் பிரமாணமாய் விளங்கின.

திருமுறை மாநாட்டில் ஆசியுரை வழங்கிய நமது நல்லை யாதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் திருமுறை காட்டிய விநாயகனின் திரு வருட் திறத்தைக் குறிப்பிட்டு வான்முகில் பெய்து திருமுறை மாநாட்டை ஆசீர்வதித்தமை நமது தவப்பேறே என்றும் எதிர் காலச் சிறப்புக்கு இது அடையாளம் என்றும் கூறினார்கள்.

இம் மாநாட்டிற் கலந்து கொண்டோரின் திருமுறைகள் குறித்த ஆய்வு நிலைக் கருத்துக்களும் பண் சுமந்த பாடல்களும் இக் கட்டுரை களில் இன்னல்பட்ட இதயங்களுக்கு இதமளிக்கும் மருந்தாய் மந்திர மாய் அமைந்தன. இத்திருமுறை மாநாடு சிறக்க சிந்தனையால் செயல் வடிவால் திட்டமிட்டுழைத்த கல்லூரி அதிபர் ச. பொன்னம்பலம் அவர்களையும் துணைஅதிபர்களான நா.சோமசுந்தரம் பொ. மகேந்தி ரன் அவர்களையும் ஆசிரியர்களான சிவ மகாலிங்கம், வண்ணை சிவ ராசா, புண்ணியலிங்கம், சண்முகலிங்கம், குமாரலிங்கம் ஆகியோரை யும் இவர்கள் வழியில் இயங்கிய மாணவர்களையும் ஆலயமணி வாழ்த்து கின்றது.

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடந்த யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் மாநாடு சைவசமயத்திலுள்ள பல்வேறு சிந்தனைகளையும் சிக்கல்களையும் வெளிக்கொணர்ந்ததோடு சிந்தனை களைச் செயல்வடிவமாக்குவது குறித்தும் சிக்கல்களை அவிழ்க்கும் முயற் சிகள் பற்றியும் பல கோணங்களிலும் ஆராய களம் அமைத்துக் கொடுத் தது. பல ஊர்களில் இருந்துவந்த பிரதிநிதிகளும் சிவநெறியாளர்களும் சைவத்தமிழ் அறிஞர்களும் தங்கள் அபிப்பிராயங்களையும் ஆலோச னைகளையும் வேண்டுகோள்களையும் கூறினார்கள்.

நமது சமய சித்தாந்தங்களும் எழுச்சித்திட்டங்களும் சரிவர நடை முறைப் படுத்தப்படவும் கோவில் வழிபாட்டு முறைகள் ஒழுக்கநிலை கள் தலைவிரி கோலங்கள் அரைகுறை ஆடைகள் நாகரிகப் போக்கு கள் முதலியவற்றைச் சீர்செய்யவும் இந்து இளைஞர் பேரவை சேனை யாகவும் செயல்பட வேண்டும். அச்சேனை சிவசேனையாகவும் மிளிர வேண்டும் என்று ஆலயமணி ஆசிரியர் வேண்டுகோள் விடுத்தமை பெரும் வரவேற்பைப் பெற்றது.

பிற சமய ஆதிக்கம் நிலவிய காலத்தில் சமய குரவர்கள் தோன்றி எப்படி சமயப் புரட்சி செய்தார்களோ அது போன்று இங்கு உரு வாகும் இந்து இளைஞர்களின் சிவசேனை புரட்சி செய்ய வேண்டும் றுஎன் சிவசேனையை வரவேற்று அன்னை துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் வழிமொழிந்து உரையாற்றியமை மாநாட்டுப் பேராளர்களையும் பிரதிநிதிகளையும் நமது சமயம் சார்ந்த சமயிகளை யும் சிந்தனைக்குள்ளாக்கியமை குறித்து சான்றோருலகம் மகிழ்வடைகி றது.

யாழ் இந்துக் கல்லூரித் திருமுறை மாநாடும் வட- இலங்கை இந்து இளைஞர் பேரவையின் வருடாந்த மாநாடும் சிவநெறி வாழ்வுக்குப் புதுநெறி காட்டிய புண்ணியத் திருவிழாக்களே.

1-9-89 ஆசிரியர்

முகப்பில் தெரியும் முகம்

# சைவசித்தாந்த நெத்து வித்துவம் பொன்னுன கனகசபை

தமிழ் தனது மரபுகளால் மகிமை கண்டு நிற்பது போல்; சைவ சித்தாந்தமும் சிவநெறி மாண்புகளால் செம்மாப்படையும் செழுந் தமிழ் வழக்காகும். வரலாறு வரையறுக்கப் படுவதற்கு முன்பே வாழ்க் கையை அரண் செய்ய வந்த தத்துவம் சைவ சித்தாந்தமே. இத்தத் துவத்தின் தரம் தாற்பரியம் தாக்கம் பற்றி சேர். ஜோன்மார்ஷல் முதலிய அறிஞர்கள். பரக்கக் கூறியுள்ளனர். சைவசித்தாந்தமே சித் தாந்தம் மற்றவையெல்லாம் பூர்வ பக்கங்கள் என்பது முடிந்த முடிபே.

சைவசித்தாந்தப் பாத்தியில் விதையிட்ட வித்துக்கள் விருட்சமா கிக் கிளைபரப்பி பூத்துக் காய்த்து கனிந்து நெத்தாகி மீண்டும் வித் தாகி விளங்கும் பாரம்பரியத்தில் கணிப்புற்ற கல்விமானுய் அருள் நெறியாளராய் சிவநெறி முறையினராய் திகழ்பவரே புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் வாழும் சிறப்பிடமாகவும் வைத்திருக்கும் வித்துவான் பொன்.அ.கனகசபை அவர்கள்.

பயிற்றப்பட்ட முதலாம் தர தலைமையாசிரியராய் கல்விச் சேவை யிலீடுபட்ட இவர் வித்துவான் ந.சுப்பையா பிள்ளையிடம் குரு சீட முறைப்படி எட்டு ஆண்டுகள் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற் றுத் தேறியவர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் வித்துவான் பட்டம் பெற்ற இவர் சைவ சித்தாந்த சாஸ்திரங்களை சித்தாந்தரத்தினுகரம் வைத்தியர் சி. கணபதிப்பிள்ளை (ஈசானசிவன்) சித்தாந்த நல்லறிஞர் வச்சிரவேலுமுதலியார் காஞ்சிபுரம் மெய்கண்டாராதீன குருமகா சந்நிதானம் ஞானப் பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் முத லாம் சித்தாந்த மூத்த தலைமுறையினரிடம் வரன் முறையாக படித்து விளக்க ஒழுக்கங்களில் தெளிந்தவர்.

கவித்துவ ஆற்றல் மிக்கவரான பொன்.அ.க. திருக்கேதீஸ்வர கௌரி அம்பிகை நான்மணிமாலை புங்குடுதீவு திருப்பெருங்காடு கிராஞ் சியம்பதி கீதாஞ்சலி, மூத்த நயினர் புலம் விநாயகர் இரட்டை மணி மாலை ஆகிய கவிதை நூல்களை ஆக்கி வெளியிட்டதோடு பல ஊஞ் சல்களையும் யாத்துள்ளார்.

இதுவரை காலமும் உரையற்றிருந்த திருச்செந்தூர் அகவல் என்னும் சுப்பிரமணியர் அகவிலுக்கு விளக்க உரை எழுதி வெளியிட் டுள்ளார். இவற்றுடன் திருவுந்தியார் உரை விளக்கம், திருக்கோவை யார் வசனக் களஞ்சியம் ஆகியனவும் இவர் கருத்து வண்ணங்களாய் வந்துள்ளன. சர்வஞானேத்தர ஆகமம், ஞானபாதவசனம் என்னும் நூலும், ஓம்கார விளக்கம் என்னும் நூலும் அச்சில் உள்ளன.

எழுத்தாலும் பேச்சாலும் தமிழும் சைவமும் பரப்பும் வித்துவான் அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் அழைப்பில் தென்னகம் சென்று திருத்தளிநாதர் ஆலயத்தில் நடைபெற்ற சைவ மாநாட்டில் சிறப்புரை ஆற்றி சித்தாந்தச் செம்மல்களால் பாராட்டப் பட்டதோடு தவத்திரு அடிகளாரின் கௌரவத்தையும் பெற்றவர்.

அகில இலங்கை அருள் நெறிமன்றம் புங்குடுதீவு சைவகலாசங்கம், அகில இலங்கை காந்தி சேவாசங்கம் ஆகிய சமூக சேவை இயக்கங்களின் முக்கியஸ்தராயிருந்து சமய சமூகத் தொண்டுகளைச் செய்தவர். இலங்கை வடபிராந்திய சர்வோதய இயக்கத்தலைவராய் இருந்த காலத்தில் பல ஊர்களுக்கும் சென்று காந்தீய தத்துவத்தை விதைத்தவர். இந்தியாவில் காஞ்சிபுரத்திலே நடந்த சர்வோதய மண்டலசமாசப் பெருவிழாவில் வினோபாபாவே, இராஜேந்திரப் பிரசாத் முதலிய சர்வோதயத் தலைவர்கள் சமூகத்தில் இலங்கைப் பிரதிநிதியாய் கருத்துரை வழங்கியபோது வினோபாபாவை இலங்கைக்கு வந்து பாத தீட்சை கொடுக்கும்படி வேண்டியவர். இதனாலேயே உலகப் பாத யாத்திரைப் பயணத்தில் இங்கு வந்த சர்வோதய சகோதரிகள் நால்வர் வித்துவானுடைய இல்லத்தில் இருபத்தொருநாட்கள் தங்கிச் சென்றனர்.

வவுனியா தாண்டிக்குளம் இராமகிருஷ்ண சங்கப்பிரமண்டு மகா வித்தியாலயத்தை உருவாக்குவதற்கு அல்லும் பகலும் பாடுபட்ட இவர் புராண படனம், திருமுறை ஓதல் சைவ சமயச் சொற்பொழிவுகள், சமுதாயப்பணி, ஞானபூசை இன்னோரன்னவைகளால் தன் வாழ்நாளைப் புனிதப் படுத்திவருகின்றார்.

கொழும்புத்துறை சிவயோக சுவாமிகளை ஞானகுருவாக ஏற்றுள்ள வித்துவான் யோகர் மகாசமாதியடைந்த ஆயிலிய நட்சத்திரத்தில் நல்லூர் தேரடியில் செய்வது போன்று தனது இல்லத்திலும் மாதந்தோறும் தவறாது குருபூசை செய்து வாழ்கின்றார். யோகசுவாமிகள் தனது குரு புங்குடு தீவைச் சேர்ந்தவர் என்று இவருக்குச் சொல்லியதிலிருந்து தான் பிறந்த மண்ணை மிகநியும் வணங்குகின்றார்.

வெண்ணீற்றுப் பூச்சும் வெண்தாடிக் கோலமு மாய் குருபூசையாலும் ஞானபூசையாலும் தவமியற்றும் வித்துவம் பொன்னுன கனகசபை ஐயா அவர்கள் சைவ சித்தாந்த நெத்துக்களில் ஒருவர். இவர் நீடுவாழ மீனாட்சியோடுறை சோமசுந்தரேசப் பெருமானைச் சிந்தித்து ஆலயமணி அணியினர் பிரார்த்திப்போம்.

—ஈழத்துச்சிவானந்தன்

# சமயக் கற்பனை-ஓர் உளவியல் நோக்கு

கலாநிதி. சபா-ஜெயராசா

மனிதனுக்கே உரிய சிறப்பு அவனது கற்பனைத்திறன். பொதுவாக கற்பனைத்திறன் மூவகை அருவிகளாகச் செயற்படும். அழகியற் கற்பனை, அறிவியற் கற்பனை, சமயக்கற்பனை என்றவாறு கற்பனை அருவிகள் கிளைகள் பரப்பும். அவற்றிலே புனைதிறன் பரவசம் காணப்படும்.

அழகுப் பொருளின் ஆக்கத்தோடு இணைந்தது அழகியற் கற்பனை. அறிவியல் எடுகோள்களின் அடிப்படையில் விரிவாகும் கற்பனை அறிவியற் கற்பனை. ஆர்தர்.சி.கிளார்க் என்பவரின் எழுத்தாக்கங்கள் அறிவியற்கற்பனைக்கு எடுத்துக்காட்டுகள். சமயநம்பிக்கைகள் விழுமியங்கள் என்பவற்றால் விரிவாக்கப்படும் கற்பனை; சமயக் கற்பனை. இவையனைத்தும் கவின் பெறுவனப்பின் வடிவங்கள்.

சமயம் சார்ந்த உளப்படிமங்களால் நிகழ்த்தப்படுவது சமயக்கற்பனை. அவ்வாறாயின் உளப் படிமம் என்றால் என்ன என்பதை முதற்கண் விளங்குதல் வேண்டும். புலன்கள் வழியாக மனித உள்ளத்திலே உருவாக்கப்படும் வடிவம் புலக்காட்சி என்று கூறப்படும் புலக்காட்சியை அறிகையின் அடிப்படை நிலையென்று கொள்ளலாம். அறிகையின் மேம்பட்ட நிலை உளப்படிமங்களாற் சிந்தனையைக் கட்டி யெழுப்பலாகும். இவற்றை மேலும் விளக்கலாம்.

புலவுலகிலுள்ள ஒரு பொருள் அல்லது நிகழ்ச்சி, மனிதனது புலன்களைப் பாதிக்கும் பொழுது தோன்றுவது புலனுணர்ச்சி எனப்படும். அவ்வாறு தோன்றும் புலன் உணர்ச்சிக்குப் பொருள் அமைத்தல் புலக்காட்சி எனப்படும். ஓர் இனிய ஓசை எமது செவியை வந்தடைகின்றது. அந்த ஓசை சுவையானது புலன் உணர்ச்சிக்கு ஓர் உதாரணம். யாரோ ஓர் அழகிய மங்கை பாடுகின்றார் என்று பொருள் கொள்வது உள்ளத்திலே உருவாக்கப்படும் புலக்காட்சி. ஓசையும் ஒளியுமாகத் தூண்டிகள் உலாவரும்.

இனிய ஓசையும், அந்த ஓசையை உருவாக்கிய மங்கையுமின்றி அவற்றைப் பற்றிய உளப் பிம்பங்களை உருவாக்குதல் உளப்படிமம் என்று கூறப்படும். கழிந்து சென்ற துன்பங்களும், இன்பங்களும் படிமங்களாக மனத்திலே நின்று உலாவருகின்றன. அவை அழகினதும் அனுபவங்களினதும் கருவிகளாகவுள்ளன.

படிமங்கள் பலவாறு பாகுபடுத்தப்படும். கட்புலன் வழியாக உருவாக்கப்பட்ட படிமம், செவிப்புலன் வழியாக உருவாக்கப்பட்ட படிமம், முகர்தல், தொடுதல், என்ற செயல்களால் உள்ளத்திலே தோற்றுவிக்கப்பட்ட படிமங்கள், என்றவாறு பாகுபடுத்தலாம்.

படிமங்களினூடாகக் கற்பனையுருவாக்கப்படும். இவ்வாறாக மலரும் கற்பனை "விளைவு" செய்வதாகவோ, "மீள் விளைவு" செய்வதாகவோ, அமையலாம். சமயம் சார்ந்த கற்பனையில் மீள் விளைவு மேலோங்கி நிற்கும். அதாவது சமய இலக்கியங்கள், கலைகள், அனுபவங்கள் தொடர்பாக ஏற்கனவே பெற்ற படிமங்களை மீண்டும் மீண்டும் மனக்கண்முன் கொண்டு வருதல் "மீள் விளைவுக் கற்பனை" என்று கூறப்படும்.

பரதநாட்டியத்தில் இடம் பெறும் கற்பனைகள் மீள் விளைவு செய்தலுக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். கண்ணனாகவும் ராதையாகவும் ஏற்கனவே கண்ட படிமங்கள் மீட்டுப் பார்த்தலினாற் கற்பனை இன்பம் விரிவு செய்யப் படுகின்றது. தேவாரங்களின் இசைப் படிமங்கள், காட்சிப் படிமங்கள் என்பவற்றை மனத்திரையில் மீள வருவித்துச் சமயக் கற்பனையின் வாயிலாக உளத்திருத்தி கொள்வாரும் இருக்கின்றனர். மீள் விளைவானது நினைவுத் திறனுடன் இணைந்து நிற்கும். நினைவுத்திறன் வல்லாரும் வளர்ப்போரும் மீள் விளைவுக் கற்பனையில் மேலோங்கியோராய் விளங்குவர்.

சமயங்களில் இடம்பெறும் இசை மீள் விளைவுக் கற்பனையை வளர்க்கத் துணைநிற்கின்றது. 'இசையிலே சஞ்சரித்தல்', 'இசைக்கற்பனை, நாதரூபங்களில் நயத்தல்', ஓசையின் உன்னதங்கள்' 'மந்திரம்' போலும்சொல்லின்பம்' என்ற தொடர்கள் இசையால் மீட்டெடுக்கும் கற்பனை வடிவங்களைக் குறிப்பிடுகின்றன.

"மீள் விளைவுக் கற்பனைகள்" மாத்திர மன்றி, "விளைவுக் கற்பனைகளும்" சமயங்கள் வாயிலாக உருவாக்கப் படுகின்றன. ஏற்கனவே உருவாக்கப்பட்ட பழைய உளப்படிமங்களைப் புதிய முறையிலே அமைத்தல் விளைவுக் கற்பனை எனப்படும். புதியதொரு வடிவத்தையாக்குதலுடன் விளைவுக் கற்பனை தொடர்பு கொண்டுள்ளமையால், அதனைப் படைப்புக் கற்பனை என்றும் உளநூலார் குறிப்பிடுவர்.

புதிய புதிய கலைவடிவங்கள், இலக்கியங்கள், சமயப்பரப்பிலே தோற்றுவிக்கப்படுகின்றன. சமயம் சார்ந்து எழும் விளைவுக் கற்பனைகளிற் "பயன் கொள் நெறி" மேலோங்கி நிற்கும் என்பது சமய இலக்கை அடைவதே அக்கற்பனையின் உன்னத இலட்சியமாக அமையும்.

சமயக் கற்பனை நடத்தைக் கட்டுப்பாட்டுக்கான கருவியாகவும் செயற்படுகின்றது. கற்பனையை வழங்குபவரும் சுவைப்பவரும், குறித்த ஒழுக்கக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளத் தூண்டுவனவாக அவை கட்டியெழுப்பப்படும். அவற்றுடன் மனவெழுச்சிகள் இணைந்தும் குழைந்தும் இருக்கும்.

கற்பனையை உருவாக்கும் கலைக்கூடங்களாக இயற்கையும், சமூகமும் அமைகின்றன. தெரிந்தவற்றிலிருந்தே கற்பனை நிகழத் தொடங்கும். அறியாத தொன்றை, அல்லது தெரியாத தொன்றைப் பற்றிக் கற்பனை செய்யும் பொழுது, தெரிந்த அலகுகளே துணையாக அமைகின்றன. பூமி, சந்திரன், நட்சத்திரங்கள் ஆகிய தெரிந்த அலகுகளை வைத்தே அறியாப் பிரபஞ்ச வெளிபற்றிய கற்பனை முகிழ்ந்தெழுகின்றது. தெய்வங்களுக்கு மனித வடிவங்கள் கொடுத்தல், தெரிந்த அலகுகளிலிருந்து கற்பனை நதி ஊற்றெடுப்பதைத் தெளிவுபடுத்துகின்றது. "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து" என்றவாறு தெரிந்த வடிவிலிருந்து தேடல் தொடங்குகின்றது.

கற்பனையின் பிறிதொரு தொழிற்பாடு 'இணைத்தல்' அல்லது பொருத்துதலின் வாயிலாகப் புத்தாக்கம் ஒன்றை ஏற்படுத்தலாகும். விலங்குகளுக்கு மனிதரின் தலையை இணைத்தல் மனிதருக்கு விலங்குகளின் தலையை இணைத்தல், என்பவை சமயம் சார்ந்த புராணக் கதைக் கற்பனைகளிலே காணப்படுகின்றன. இவ்வாறான கற்பனைகள் மனிதரின் உற்பத்தித் தொழிற்பாடுகளுடன் இணைந்த அனுபவங்களாகும்.

கருவிகள் இயற்றுவதற்கு மனிதன் பல்வேறு இணைப்புக்களைக் கையாள வேண்டியிருந்தது. உதாரணமாக இரும்பு அலகுடன் மரப் பிடியைக் கொண்ட கோடரி, கத்தி, மண்வெட்டி போன்ற கருவிகளை வெகு இலாவகமாகவும் வினைத்திறனுடனும் மனிதரால் பயன்படுத்த முடிந்தது. இவ்வாறு உற்பத்தி வாயிலாக எழுந்த அனுபவங்கள் புதிய புதிய இணைப்புக்களைச் சமயக் கற்பனைகளில் ஏற்படுத்தின.

மேற்கூறிய பண்புகள் அனைத்தையும் தொகுத்து நோக்கும் பொழுது சமயக் கற்பனைகள் வாழ்க்கை இருப்பிலிருந்து ஊற்றெடுப்பதைக் குறிப்பிட வேண்டியுள்ளது. எத்தகைய ஒரு சமூகத்திலும் என்றுமே மக்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பதற்குரிய கடவுச் சீட்டுக்களை வழங்க முடியாது. இந்நிலையிற் சமயங்களுக்கும், கலைஞனுக்கும், உளவியலாளனுக்கும் வேலைப்பழு அதிகரித்துக் கொண்டே செல்லும். கற்பனைகள் தொடர்ந்தும் இயக்கப்பட வேண்டிய உளப் பணிகளாக முன்னேறும் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கலுக்கு முடிவேயில்லை.

# கண்ணதாசன்

## வேண்டுதல்

விலைவாசி ஏறாத நாடொன்று கூறுவாய்
 விரைவில்நான் செல்ல வேண்டும்
வீராப்புப் பேசாத அரசியலைக் காட்டுவாய்
 வேதமாய் ஆக்க வேண்டும்
கொலைகாரர் இல்லாத ஊரொன்று சொல்லுவாய்
 குடியேறிப் பார்க்க வேண்டும்
குடியைக் கெடுக்காத அரசொன்று கூறினால்
 கோஷத்தில் வாழ்த்த வேண்டும்
சிலைவைக்க இந்நாட்டில் இடமொன்று காட்டினால்
 சேவைக்கு வைக்க வேண்டும்
சிரித்துக் கெடுக்காத நபரொன்று தோன்றினால்
 தினமும் வணங்க வேண்டும்
மலையோடு நதிகளும் வாழ்கின்ற நாட்டிலே
 மனிதத் துவங்க ளிலையே
மாபெரிய மதுரைநகர் ஆள்கின்ற தேவியே
 மங்கைமீனாட்சி உமையே!

பொய்வாழ்க்கை வாழ்கின்ற போலிகள் வாழ்விலே
 புகழ்கூட வருகின்றதே
பூட்டைத் திறக்காமல் வீட்டுக்குள் நுழைவார்க்கும்
 புதுவாழ்வு கிடைக்கின்றதே
கைபோட்ட இடமெலாம் காசையே பார்ப்போரை
 கலைவள்ளல் என்கின்றதே
கண்ணீரில் பெண்வாழ் வக்க ரந்தோட விடுவார்க்குக்
 கைலாகு தருகின்றதே
செய்யாத குற்றங்கள் செய்வார்க்கு எந்நாளும்
 செல்வங்கள் வளர்கின்றதே
தேரோட்டத் தெரியாத முட்டாள்கள் பலருக்குக்
 காரோட்டத் தெரிகின்றதே
மைவார்த்த கண்ணோடு கைகோர்த்த சொக்கனை
 மடிவார்த்த வண்ண மயிலே

மாமாயக் கண்ணனவன் பாசமிகும் தங்கையே
மதுரைமீனாட்சி உமையே!

கடுகளவும் குறையிலா ஸ்ரீராமச் சந்திரன்
கானகம் போன தென்ன
கருணைஇலா ராவணன் தவம்செய்து தவம்செய்து
கயிலையை வென்றதென்ன
கொடுமைகளின் மன்னர்கள் நாடாளு வோர்களாய்
கொட்டம் அடித்த தென்ன
கோடையினில் வருகின்ற புயலொன்று தான்வந்து
கொடுமை அழிந்த தென்ன
ஆடை இலா நாள்முதல் அறிவார்ந்த நாள்வரை
அநியாயம் வென்ற தென்ன
அநியாயக் காரர்கள் சரியான நேரத்தில்
அடியோடு சாய்ந்த தென்ன
வரிடைமலர்க் கூந்தலில் வண்ணமணிச் சொக்கனை
வளைத்தாளும் வண்ண மயிலே
வடமதுரைக் கண்ணனெனும் தருமதுரை தங்கையே
மதுரைமீனாட்சி உமையே!

—கல்கி—
3–6–79ல்

---

கடையில் வாங்க வேண்டிய சாமான்களை ஒரு சீட்டில் எழுதிக் கொண்டு போய்ச் சாமான்களை விலைக்கு வாங்கிக் கொள்கிறோம், இன்னது வாங்கவேண்டும் என்று தெரிந்து விட்ட பிறகு, சீட்டில் என்ன விசேஷம்? சாஸ்திரங்களில் சொல்லப் படுவதெல்லாம், இந்த மார்க்கம் சென்றால் ஆண்டவனை அடையலாம் என்பதுதான். மார்க்கத்தை அடைந்த பிறகு அடுத்த படி அதில் நடக்க வேண்டியது அவசியம். அதைச் செய்யாமல் சீட்டையே மனனம் செய்து கொண்டிருந்தோமானால் கடைச் சாமான் வீட்டுக்கு வருமா? ஓர் ஊருக்கு வழி தெரிந்து கொண்டு அந்த வழியைப் பிடித்து நடந்து சென்றால் ஊர் போய்ச் சேருவோம். வழி தெரிந்தால் மட்டும் போதாது. அந்த வழியில் நடந்தால்தான் ஊரை அடையலாம்.

—பகவான் ராமகிருஷ்ணர்.

# பிள்ளைவளர்ப்பு

## கிழக்கும் மேற்கும்

கவிஞர். சோ. பத்மநாதன்

உங்கள் குழந்தைக்கு நீங்கள் கொடுக்கக் கூடிய பரிசுகளுள் எல்லாம் தலையாயது எது தெரியுமா? உங்கள் நேரந்தான்—உங்கள் பிள்ளைகளின் வளர்ச்சிக் கட்டம் ஒவ்வொன்றிலும் நீங்கள் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும்.

நீங்கள் இருக்கிறீர்கள்; அக்கறை காட்டுகிறீர்கள் என்று அறிவதே அவர்களுக்கு ஒரு பாதுகாப்புணர்வை —நம்பிக்கையை - தருகிறது.

நீங்கள் கடும் உழைப்பை - சாதனையை — எதிர்பார்க்கிறீர்கள் என்பதை உணர்வதே ஒரு தூண்டுதல்தான்.

ஆம், இன்றைய குடும்பவாழ்வில் உள்ள மிகப்பெரும் குறைபாடு இதுதான்: பெற்றோர் பங்காளிகள் ஆவதில்லை.

Ronald D. Kelly என்ற அமெரிக்கர் மேற்கத்திய குடும்ப அமைப்பின் குறைபாட்டையும், கிழக்கின் சிறப்பையும் ஆராய்கிறார்:

❀

## அப்பா ஓய்வெடுக்கிறார்.

ஓய்வுகருதி என் மனைவியும் நானும் கடலோரம் போயிருந்தோம். துவாய்களை விரித்து, கூடைகளை ஒருபுறம் வைத்து கைகால்களை நீட்டி, கடலலைகளைப் பார்க்கலானோம்.

எமக்கருகே இன்னொரு குடும்பம் தண்டிறங்கியது. அவர்களுடைய சிறுபையன் வாளியையும் ஷவலையும் எடுத்துக்கொண்டு ஈரமணலைத் தோண்டப் புறப்பட்டான்.

# சமயக் கற்பனை-ஓர் உளவியல் நோக்கு

கலாநிதி. சபா-ஜெயராசா

மனிதனுக்கே உரிய சிறப்பு அவனது கற்பனைத்திறன். பொதுவாக கற்பனைத்திறன் மூவகை அருவிகளாகச் செயற்படும். அழகியற் கற்பனை, அறிவியற் கற்பனை, சமயக்கற்பனை என்றவாறு கற்பனை அருவிகள் கிளைகள் பரப்பும். அவற்றிலே புனைதிறன் பரவசம் காணப்படும்.

அழகுப் பொருளின் ஆக்கத்தோடு இணைந்தது அழகியற் கற்பனை. அறிவியல் எடுகோள்களின் அடிப்படையில் விரிவாகும் கற்பனை அறிவியற் கற்பனை. ஆர்தர்.சி.கிளார்க் என்பவரின் எழுத்தாக்கங்கள் அறிவியற்கற்பனைக்கு எடுத்துக்காட்டுகள். சமயநம்பிக்கைகள் விழுமியங்கள் என்பவற்றால் விரிவாக்கப்படும் கற்பனை; சமயக் கற்பனை. இவையனைத்தும் கவின் பெறுவனப்பின் வடிவங்கள்.

சமயம் சார்ந்த உளப்படிமங்களால் நிகழ்த்தப்படுவது சமயக்கற்பனை. அவ்வாறாயின் உளப் படிமம் என்றால் என்ன என்பதை முதற்கண் விளங்குதல் வேண்டும். புலன்கள் வழியாக மனித உள்ளத்திலே உருவாக்கப்படும் வடிவம் புலக்காட்சி என்று கூறப்படும் புலக்காட்சியை அறிகையின் அடிப்படை நிலையென்று கொள்ளலாம். அறிகையின் மேம்பட்ட நிலை உளப்படிமங்களாற் சிந்தனையைக் கட்டி யெழுப்பலாகும். இவற்றை மேலும் விளக்கலாம்.

புலவுலகிலுள்ள ஒரு பொருள் அல்லது நிகழ்ச்சி, மனிதனது புலன்களைப் பாதிக்கும் பொழுது தோன்றுவது புலனுணர்ச்சி எனப்படும், அவ்வாறு தோன்றும் புலன் உணர்ச்சிக்குப் பொருள் அமைத்தல் புலக்காட்சி எனப்படும். ஓர் இனிய ஓசை எமது செவியை வந்தடைகின்றது. அந்த ஓசை சுவையானது புலன் உணர்ச்சிக்கு ஓர் உதாரணம். யாரோ ஓர் அழகிய மங்கை பாடுகின்றார் என்று பொருள் கொள்வது உள்ளத்திலே உருவாக்கப்படும் புலக்காட்சி. ஓசையும் ஒளியுமாகத் தூண்டிகள் உலாவரும்.

இனிய ஓசையும், அந்த ஓசையை உருவாக்கிய மங்கையுமின்றி அவற்றைப் பற்றிய உளப் பிம்பங்களை உருவாக்குதல் உளப்படிமம் என்று கூறப்படும் கழிந்து சென்ற துன்பங்களும், இன்பங்களும் படிமங்களாக மனத்திலே நின்று உலாவருகின்றன. அவை அழகினதும் அனுபவங்களினதும் கருவிகளாகவுள்ளன.

றோர் பங்காளிகளாவதில்லை.

பல ' நவீன ' குடும்பங்களில், குழந்தை பிறந்த சில வாரங்களி லேயே, அதைப் பகல்-பராமரிப்பு நிலையங்களுக்குக் கையளிப்பது சாதா ரண நிகழ்ச்சி. பிள்ளை 5,6 வயதை எட்டும் போது பாடசாலைகள் அதைப் பொறுப் பேற்கின்றன.

வருடங்கள் உருண்டோடுகின்றன. பெற்றோர் ஈடுபாடு இல்லா மலே, ஆசிரியர்கள்-நிர்வாகிகள் பொறுப்பில் உயர்கல்வி நடந்தேறு கிறது.

குடியேறும் குடும்பங்களின் நிலைமை வேறு. பெற்றோர், தம்பிள் ளைகளைச் சாதனை செய்யுமாறு ஏவுகிறார்கள். சொந்த நாடுகளில் உள்ள கஷ்டவாழ்வை நினைவூட்டுகிறார்கள்.

பிள்ளைகள் தம் சக்தியை அதிகபட்சம் பயன்படுத்த வேண்டும் என்று தூண்டுகிறார்கள். அவர்கள் முன்னணியில் திகழ வேண்டுமென எதிர்பார்க்கிறார்கள்.

அவர்கள் நம்பிக்கை வீண்போவதில்லை

இத்தனைக்கும் மேலாக, ஓர் இளைஞன் யுவதியின் வாழ்வின் ஒவ் வொரு திருப்பத்திலும், அக்குடும்பம் சம்பந்தப்பட்டிருக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன், ஒரு பிரபல கல்வியாளர் வெற்றிகர மாக இயங்கும் பாடசாலைகளின் பின்னணிகளை ஆராய்ந்தார். அவர் கண்டவை பல. அவற்றுள் முக்கியமானது எது தெரியுமா? பாடசா லையிடமோ மாவட்டத்திலோ எவ்வளவு பணம் இருந்ததென்பதல்ல வெற்றிக்கு முக்கிய காரணம், பெற்றோர் ஈடுபாடே.

பெற்றோர் தம் பிள்ளைகளில், பாடசாலையில், அதன் செயற்பாடு களில் ஆசிரியர்களில் அக்கறை செலுத்த, பாடசாலை வெற்றி பெறும் வாய்ப்பும் அதிகரிக்கிறது.

பெற்றோர் பாடசாலைப் பணிகளில் ஈடுபட வேண்டும். பெற் றோர் – ஆசிரியர் சங்கங்கள் துடிப்புடன் இயங்க வேண்டும். அவர்கள் பாடசாலை நிர்வாகிகளைச் சந்திக்க வேண்டும். பாடசாலை என்ன செய் கிறது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். பாடசாலையின் பாரம்பரியத்தை – ஒழுங்கை – அவர்கள் பாதுகாக்க வேண்டும்.

இவை நிறைவேற்றப்பட்டால் எல்லோரும் வெல்வர்!

# தெருக்கோயில்களும் திருக்கூட்டத்தினரும்

"கோப்பாய், சிவம்"

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது முது மொழி. சைவப் பெருமக்கள் குடியிருக்கும் ஊர்கள் தோறும் ஆலயங் கள் அமைக்கப்படுவதும் அவை முறைப்படி பரிபாலிக்கப்படுவதும் அவ சியமாகும். இதில் யாருக்கும் கருத்துவேற்றுமை இல்லை.

இன்று புதிது புதிதாகக் கோயில்கள் பல கட்டப்படுவதை நாம் காண்கின்றோம். மகிழ்ச்சியும் அடைகிறோம். அவற்றைக் கட்டியெழுப் பும் தர்மசீலர்களைப் புகழவும் செய்கிறோம்.

ஆனால்—

இவ்வாலயங்கள் எல்லாம் நமது சமயம் வளர வகை செய்கின்ற னவா?

சமயம் வளர்தல் என்றால் என்ன? சமயாசாரமான நடைமுறை கள், சடங்குகள் அதிகரிப்பதா? அல்லது சைவசமயத்துக்கு மாற்றுச் சமயங்களிலிருந்து பலரை மாற்றி எடுப்பதா?

இவை எதுவும் பொருத்தமானதாக இல்லை. சமயாசாரமான நமது சைவ நடைமுறைகளை மக்கள், புரிந்து கொண்டு அவற்றைத் தமது வாழ்க்கையில்—வழக்கத்தில்—அனுசரித்தலில் குறைபாடு எதுவு மில்லாமல் ஒழுங்காக நடப்பராயின் அதுவே நமது சமய வளர்ச்சி என்று கூறலாம்.

ஆக, புதிது புதிதாகத் தோன்றும் ஆலயங்கள் யாவும் நமது சமயாசாரநடைமுறைகளைப் பாழ்படுத்தாமல் விட்டாலே—சமயாசார அனுஷ்டானங்கள் தமது இயல்பான நடைமுறையில் ஒழுங்காக இயங்கி வந்தாலே போதுமானது என்றும் எண்ணத் தோன்றுகிறது.

இது விபரீதமான ஒரு சிந்தனையாகத் தோன்றலாம்.

ஆனால்,

'புதியதொரு ஆலயத்தைக் கட்டியெழுப்புவதைவிட பழமை யான-சிதைவுற்ற ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்வதே மேலான சமயத்தொண்டு!' என்பதனை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் வலியுறுத் தியிருக்கிறார்கள்.

புதிதுபுதிதாக இன்று உருவாகும் பல ஆலயங்களுக்கருகில் ஏற்கெனவே பழைய ஆலயங்கள் சில கவனிப்பாரில்லாமல் அழிந்து கொண்டிருப்பதை நாம் அவதானிக்க முடியும். ' நானும் ஒரு கோயிலைக் கட்டினேன் ' என்ற ஆணவ முனைப்புக் காரணமாக அல்லது ஏற்கனவே இருக்கும் ஆலயங்களில் ஏற்பட்ட கசப்புணர்வு காரணமாக எழுந்த போட்டிமனப்பான்மை என்பன புதிய ஆலயங்கள் பல தோன்றக் காரணமாக அமைகின்றன. இத்தகைய ஆலயங்கள் சைவசமய வளர்ச்சிக்கு உதவ முடியுமா?

பல சமாதிக் கோயில்கள் அவற்றின் கீழ் சமாதிநிலையிலுள்ளவர்களின் ஆத்மீகப் பெரும் சக்தி காரணமாக அருள்வளம் செழிப்பனவாகக் காணப்படுகின்றன. வேறு பல திருத்தலங்கள் தேவர், முனிவர் முதலிய ஆன்மீகப் பெருஞ் செல்வர்களினால் ஸ்தாபிக்கப்பட்ட பெருமையினால் இன்றும் அருளொளி வீசிக்கொண்டிருக்கின்றன.

எனவே ஆலயங்களை ஸ்தாபிப்பவர்கள் கட்டியெழுப்புபவர்களின் உளப்பாங்கு, சிந்தனை, மனோசக்தி என்பன அவ்வாலயங்களின் அருட்சிறப்பின் தன்மையை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அதனால் உண்மையான சமய, சமூக சேவை மனப்பான்மையும் ஆத்மீக உணர்வும் மிக்கவர்களால் அந்த இடத்தின் தேவைகருதி அமைக்கப்படும் ஆலயங்களே நமது சமய வளர்ச்சிக்கு வேண்டப்படுவன. அவையே அருளொளி வீசக்கூடிய ஆலயங்களாயும் அமையும்.

பல ஆலயங்களில் நித்திய பூஜைக்கு வேண்டிய கற்பூரம் தேங்காயெண்ணெய், நிவேதனப் பொருட்கள் போன்றவை மற்றும் பூஜைக்கான உபகரணங்கள் கூட இல்லாமல் இருப்பதை நாங்கள் காண முடிகிறது. அவற்றுக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்தி தினமும் ஒரு காலப்பூஜையாவது ஒழுங்காக நடைபெற வழிசெய்யாமல் புதுப்புது ஆலயங்களை அமைப்பவர்களும், அமைக்க உதவுபவர்களும் சிவபுண்ணியம் செய்பவர்களாவார்களா?

இனி, நம்மவர்களிடையே இன்னுமொரு ' பண்பாடு ' வலுப்பெற்று வருகிறது. தத்தமது ஊர்களிலே தமக்கருகிலே இருக்கின்ற சின்னஞ்சிறு கோயில்களைப் பற்றி அதிகம் சிந்திக்காமல் – நாட்டில் பேர்பெற்று விளங்கும் பிரசித்தி பெற்ற ஆலயங்களை நாடிப் படையெடுத்துச் சென்று வழிபடுவதும் – நேர்த்திக்கடன்கள் வேண்டுதல்களை அந்த ஆலயங்களை முன்னிட்டு நிகழ்த்துவதும் கண்கூடு.

தமதூரிலிருக்கும் கோயிலில் திருவிழாச் செய்ய ஒரு வாகனம் தானும் இல்லாத நிலையில் பெரிய ஆலயங்களுக்குப் பத்தோடு பதி

ஞென்றுக இன்ஞெரு வாகனத்தையும் செய்து கொடுப்பதுடன் வருடா வருடம் அதன் பரிபாலனச் செலவையும் கொடுக்க ஒப்புவது விந்தையல்லவோ?

நமது முன்ஞேர்கள் கதிர்காம யாத்திரை முதலானவற்றை ஆரம்பிக்கும்போது முதற்கண் தமதூரில் அமைந்திருக்கும் ஆலயத்துக்குள் சென்று வழிபட்ட பின்னரே ( குல தெய்வ வழிபாடு ) புறப்படுவது வழக்கம். இது நமது கவனத்தில் கொள்ளப்பட வேண்டுமன்ரே.

ஆலயங்களின் அருள் விளக்கமானது அங்கே வந்து வழிபடுகின்ற அடியார்களின் பெருக்கத்திஞலும், அடியார்களின் தரச்சிறப்பிஞலும் மேலோங்கி வளம் பெறும் என்பது நமது அனுபவ உண்மை; சான்ருேர் கூற்ருற் பெறும் உண்மை என்பதையும் விட விஞ்ஞான பூர்வமான நிருபணமும் இதற்கு உண்டு.

அதஞல், நமது ஆலயங்களுக்கு வழிபாடாற்றவரும் அடியார்கள் தொகையைப் பெருக்குவதிலும், அவர்களது தரச்சிறப்பை அதிகரிக்கச் செய்வதிலும் கவனம் செலுத்துவது அவசியமல்லவா? சைவாசாரமான நடைமுறைகள்-சமய அனுஷ்டானங்கள் ஒழுங்காக நடைபெறுவதை நாம் கவனித்துக் கொள்ள வேண்டுமல்லவா?

இன்றைய புதிய ஆலயங்கள் பல ‘ தெருக்கோயில் ’ களாக அமைகின்றன. அடியார் கூட்டத்தை ஆலயத்திற்கு அதிகப்படுத்த வேண்டுமென்பதற்காக ஆலயங்களைத் தெரு ஓரங்களிலும், தெருவை நோக்கியும் அமைக்கிருர்கள். தெருவைக் கோயில் வீதியாக்கிப் புறத்தே புதிய தெரு அமைத்தால் புதிய தெருவையும் கோயில் வீதியாக்கிப் பெருமை கொள்கிருர்கள்.

இந்நிலையில் பக்தகோடிகள் ஆலய வழிபாடுகளை எவ்விதம் நிகழ்த்துகிருர்கள்? இயல்பாகவே இன்று மேல் நாட்டு நாகரிகம் பெருகி வருவதால் நமது பாரம்பரியப் பண்பாட்டு நடைமுறைகள் - சைவ சமயாசாரமான அனுஷ்டானங்கள் அக்கறையின்றி அலட்சியப்படுத்தப்பட்டும், அறியப்படாமல் கைவிடப்பட்டும் அருகி வருகின்றன.

அதுமட்டுமல்லாமல், வளர்ந்து வரும் இயந்திர மயமான உலகில் மனிதனின் வாழ்க்கையும் இயந்திரப் பாங்கானதாக-விரைவானதாயும், உணர்வு பூர்வமான செயற்பாடுகள் குறைவானதாயும் - மாறி வருவதஞல் முன்பு கூறப்பட்ட பண்பாட்டு நடைமுறைகள் சிலவேளைகளில் தெரிந்திருந்தும் கூட வாழ்க்கையின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் தளர்த்தப்படுகின்றன. சம்பிரதாயங்கள் வெறும் சடங்குகளோடு முடிந்து விடுகின்றன.

அன்போடு இணையும் இரு நண்பர்கள் இதய பூர்வமாக ஆரத்தழுவிமகிழ்வது என்ற செயல் நிலை-தெரிந்தவர்களைச் சந்தித்தால் விரும்பியோ விரும்பாமலோ கைகுலுக்கிக் கொள்ளுதல் என்ற அளவிற்கு இயந்திரச் சடங்காக மாறிவிட்டதுபோல நமது சமய அனுஷ்டானங்களும் மாறிவிட்டன.

தெருவிலே போகும்போது 'தெருக்கோவில்களுக்கு' ஒரு 'சல்யூட்' அடிப்பது, அங்கு வாகனத்தை மறித்து உண்டியல் குலுக்குவோருக்கு ஏதோ ஒரு 'சில்லறை' போடுவது - காலில் அணிந்த செருப்பு சப்பாத்து முதலியவற்றுடன் ஆசனங்களில் அமர்ந்தவாறு-ஸ்நானம் முதலியன செய்யாதமைபற்றிய சிந்தனையோ, தீட்டு, துடக்கு இவை பற்றிய எண்ணங்களோ இல்லாமல் உண்டியல் குலுக்குவோர் நீட்டும் விபூதியை எந்தக்கை வசதியோ அந்தக் கையால் அள்ளி நெற்றியில் ஒரு கீறு கீறிவிட்டு மீதியை வீசி அல்லது விசிறி அல்லது வாயினால் வெளியில் ஊதித் தள்ளிவிட்டு ஓடிவிடுவது இன்று பலரது நித்திய கர்மானுஷ்டானமாக இருக்கிறது. இச்செயல் அவர்களின் அல்லது ஆலயத்தின் அல்லது சைவசமயத்தின் மேம்பாட்டிற்கு எந்த அளவில் உதவ முடியும்' நரகக் குழிக்கு விரைந்து செல்லவன்றோ வழிவகுக்கும்.

இனி சைவசமயச் சின்னங்களை அணிவோர், அணியுமாறு வழங்குவோர் இவர்களுக்கான தகுதி தராதரங்கள் வகுக்கப்பட்டிருப்பது அறியவர் யார். தம்மிலும் [illegible]ர்க்கத் தீக்ஷை முதலானவற்றில் மேலானவர்களிடமே விபூதி வாங்கி அணிவது கூறும். இங்ஙனமிருக்க, முற்குறிப்பிட்ட தெருக் கோயில்களில் விபூதி வழங்குவோர் விளையாட்டுச் சிறுவராயும் கெட்டவார்த்தை பேசுபவராயும் ஆசாரம் தூய்மை என்பன சிறிது மில்லாத வராயும்-கையிலே விபூதித் தட்டை ஏந்தியவாறே தெருவோரமும் ஆலய வீதியுமாயிருக்கும் அவ்விடத்திலேயே சிறுநீர்கழித்துஅரைகுறையில் வாகனம் வருதல் கண்டு அவ்வளவில் நிறுத்தி ஓடிவரும் இயல்பு கொண்டவராயுமிருக்க அவர்களிடத்தில் வாங்கி அணியும் விபூதி எத்தகைய பலனை அணிவோர்க்கு நல்கும்.

இவ்வாறெல்லாம் நமது ஆலயங்களும் அடியார்களும் ஆன்மீக வாழ்க்கையும் இருக்க – இந்தச் சிவபூமியில் சிவனடியார்களுக்குச் சிவாலயங்களிலேயே இத்தனை அனர்த்தங்களும் நிகழலாமா? சிவபிரானின் கண் குருடா? என்று கேட்பவர்களும் நம்மிடையே உள்ளனர்.

நமது குற்றமெல்லாம் பொறுத்து நம்மைக் காத்தருளும் தாயாக இறைவன் இருப்பதனாற்றான் – இங்கு காட்டிய வாறெல்லாம் இத்தனை பாபங்களையும் செய்தவர்களாயிருந்தும் நம்மை இன்னமும் இந்த அளவிலாவது அவர் வைத்திருக்கிறார் என்று எண்ணத்தோன்றுகிறது எனக்கு.

# சைவசித்தாந்தமும் மார்க்சியமும்

—தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

முன்தொடர்......!

**கடவுள் தன்மை:**

மார்க்சியம், மனிதனை விஞ்சிய ஒரு பொருள் இருப்பதாக ஏற்றுக் கொள்ள மறுக்கிறது.

"மக்கள் தான் முக்கியமான முதன்மையான ஆக்க சக்தி படைப்பாளி; வரலாற்றின் உண்மையான அகப்பொருள்" என்பது மார்க்சியம்.

சைவ சித்தாந்தம் கடவுளை, மனிதனை விடச் சிறந்த பொருளாகக் கொள்கிறது. ஆனால், உயர் பொருளாக இருக்கிற கடவுள் மனிதனைக் கொத்தடிமைப் படுத்துவது அல்லது உயிர்களிடத்தில் தற்குறை மனப்பான்மையைத் தோற்றுவிக்கும் உயர் மனப்பான்மையல்ல. இயல்பான வளர்ச்சியில் கூட வேற்றுமைகள் இருப்பது இயற்கை; இதற்கு மார்க்சியம் உடன்படுகிறது. கடவுளை மனிதனுக்கு வழிகாட்டும் ஆசிரியராகவும் தோழனாகவுமே சைவ சித்தாந்தச் சமயம் கருதுகிறது. மனிதருள் சிறந்த மனிதர் இருப்பதில்லையா? இலட்சக்கணக்கான புரட்சித் தொண்டர்களுக்கு மாமேதையாகவும் சிறந்தவழிகாட்டியாகவும் விளங்கவில்லையா? மார்க்சு வாழ்ந்த காலத்திலும் இன்றும் எண்ணற்ற தொழிலாளர்களுக்கும் முற்போக்குச் சிந்தனையாளர்களுக்கும் சிறந்த ஒளி விளக்காகத் திகழவில்லையா? அது போலச் சைவசித்தாந்தம் காட்டுகிற இறைவன் உயிர்க்கு நல்ல தோழனாய், ஆசிரியனாய் அமைந்து அழைத்து, வழி காட்டிச் செல்கிறான் என்று கருதப் படுகின்றதே தவிர அவர் ஒரு உயர் பொருளாகமட்டும் கருதப்பெறுவதில்லை. சுந்தரர்,

> "ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
> தோழனுமாய் யான்செய்யுந் துரிசுகளுக் குடனாகி
> மாழையொண்கண் பரவையைத் தந்தாண்டானை மதியிலா
> ஏழையேன் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே"

என்று பாடியிருப்பது அறிக. இறைவனுடைய துணையால் பெறும் அறிவு தான் ஞானம். அதாவது பேரறிவு என்று பாராட்டப் பெறுகிறது.

ஆதலால், உயிர்கள் அறிவு பெறுவது முதற்கடமை. உழைக்கும் ஆற்றலும், உழைப்பின் வழித் தொழிலியற்றலும் அவ்வழி அறிவை விரிவு செய்தலும் உயிர்களின் இயல்பாகும். இம் மூன்று நிலையும் சைவசித்தாந்தத்திற்கும் மார்க்சியத்திற்கும் இசைந்த நிலையாகும்.

ஒருமைப்பாட்டை உணர்த்தும் உயர் தத்துவங்கள்:

நாடு, மொழி, இனம், சமயம் ஆகியன மனிதனுக்குப் பிறப்பின் காரணமாகத் தற்செயலாக வந்தமைந்தன. இவற்றை எளிதில் மனிதன் மாற்றிக் கொள்ள வேண்டும். ஒப்பற்ற மனித குலத்திலிருந்து மனிதன் எந்தக் காரணத்திற்காகவும் தன்னைத் தனிநிலையிலும் சரி, பொது நிலையிலும் சரி ஒதுக்கியோ ஒதுங்கியோ வாழ்தல் கூடாது. தமிழ் நாட்டிற் பிறந்த ஒருவர் தமிழைக் கற்றறியாமல் சூழ் நிலையின் காரணமாக ஆங்கிலம் கற்க நேரிட்டால் அவருக்குத் தமிழில் பேசவும் எழுதவும் வராது. ஆங்கிலம் மட்டுமே வரும். ஆதலால் மாற்றிக் கொள்ளக் கூடியன வெல்லாம் உயிரைச் சார்ந்த பந்தங்களல்ல. அது மட்டுமன்று. ஒரு மனிதன் எல்லா மொழிகளையும் கற்கவும் முடியும்; எல்லா நாட்டு மாந்தனுகவும் முடியும்; ஆதலால் நாடு மொழி, இனம், சமயம் ஆகிய வேறுபாடுகளை மையமாகக் கொண்டு மானிட உலகத்தைப் பிரிக்கக் கூடாது என்பது மார்க்சியம்.

இயற்கையிலமைந்த தொழில் செய்யும் ஆற்றல், செய்யும் தொழில் மூலம் உலகத்தை இயக்குதல், செய்யும் தொழில் மூலம் உலக இயக்கத்துக்கு—வரலாற்றுக்கு உந்து சக்தியாக இருத்தல் ஆகியன அனைத்துலக மானிட சாதிக்கும் பொதுமை. எனவே உயிர்க்குலத்தை ஒருங்கிணைப்பது தொழில். இதுவே மார்க்சியம். சைவ சித்தாந்தத்திலும் உயிர்க்குலம்,

"அவன், அவள், அது"

என்றே பேசப் பெறுகிறது. சிவஞான போதத்தில் நாடு, மொழி, சாதி, இனம் பற்றிய சொற்கள் பயிலாமையைக் கூர்ந்தறிக.

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை"

என்றும்

"நண்ணலல் வேவாத நற்றவர் தம்மினும்
மண்ணமர மாசி செலுத்தும் பாகரினும்"

என்றும் ஒரோவழி பயின்றிருப்பினும் தொழிற் குறிப்பின் வழியிலேயாம். பிறப்பின் அடிப்படையிலன்று.

உயிர்களுக்கு முன்னேடியாக—தலைவனாக விளங்கும் இறைவனும்—தொழிலியற்றும் தலைவனாகவே பேசப்படுகிறான். அதுவும் இற்சார்பு

இல்லாத சமூகப் பொது உழைப்பாக உயிர்களின் நலம் கருதியே தொழிலியற்றும் தலைவனாகப் பேசப்பட்டிருத்தல் சிறப்பு. மெய்கண்ட நூல்களுள் ஒன்றாகிய-திருக்களிற்றுப்படியார்.

" அம்மையப்பரே, உலகுக்கு அம்மையப்பர் "

என்று உலகம் தழுவிய கருத்தை உணர்த்துகிறது. ஆதலால், சைவ சித்தாந்தச் சமயம் மானிடசாதியில் ஏற்படும் நாடு, இன, மொழிப் பிரிவினைகளைக் கடிந்து ஒதுக்குகிறது என்பது உண்மை. ஏன்? கடவுளையும் கூட உலகிற்கு ஒருவனாகவே உணர்த்துகிறது. உலகோர் எந்தப் பெயரில் எந்தக் கோலத்தில் யார் தொழுதாலும் அவர் ஒருவரே என்கிற ஒருமையில் சைவம் நிலைத்து நிற்கிறது. ஆனால், இன்று சித்தாந்தச் சைவத்தைச் சார்ந்திருப்பவர்கள், சித்தாந்தச் சைவத்தை வாழ்வியலாக்கத் தவறிவிட்டார்கள். மெய்கண்ட நூல்களும் திருமுறைகளும் அறவே மறுத்த, மனித குலத்தை வேற்றுமைப்படுத்தும் புன்மை நெறிகளை, பொய்ம்மைச் சாத்திரங்களின் பெயரால் பேணிப் பாதுகாத்து வருகின்றனர். கோடானுகோடி மக்களைத் தீண்டத்தகாதவர்களாக்கிக் கொடிய துன்பத்தை இழைத்து வருகின்றனர். மெய்கண்ட சிவம் வழங்கிய புனித நெறி–அப்பரடிகள் வழங்கிய அருள் நெறி–சேக்கிழார் காட்டிய செந்நெறி வழிவந்த தமிழகம் சராசரி மனிதனுக்குத் திருக்கோயில் வழிபாட்டுரிமையைக் கூட வழங்கவில்லை. நாடு விடுதலை பெற்ற பிறகு சட்டசபையில் இயற்றப் பெற்ற ஆலய நுழைவுச் சட்டம் தான் இந்த உரிமையைத் தந்து, மனிதகுலத்தின் மீது படிந்திருந்த கறையை நீக்கியது. ஆக, மனிதகுலத்தை வேற்றுமையற்ற ஒருமையுணர்வுடையதாகக் காண்பதில் சைவ சித்தாந்தச் சமயமும் மார்க்சியமும் ஒரே நிலையின.

வறுமை நீக்கத்திற்கு வழிகாட்டாதது ஏன்?

மானிடசாதியில் அடுத்துள்ள பெரிய வேற்றுமை வளம்–வறுமை. ஆகும் வறுமையை,

"வறுமையாம் சிறுமை"

என்று சிவஞான சித்தியாரும்

" நல்குரவென்னும் தொல்விடம் "

என்று திருவாசகமும் கடிந்து கூறுகின்றன. வறுமை, வளம் என்கிற வேறுபாடு இயற்கை என்றோ கடவுளின் படைப்பு என்றோ, மாற்ற முடியாதது என்றோ, மாற்றக் கூடாது என்றோ சைவ சித்தாந்தம் கூறவில்லை. இன்னும் தெளிவாகச் சொன்னால் இத்துறையில் சைவ சித்தாந்தச்சமய நெறியாளர்கள் துறைபோக ஆய்வு செய்தார்கள் என்று

கூறுவதற்கில்லை அதுமட்டுமன்று, அங்ஙனம் துறைபோக ஆய்வு செய்வதற்குரியசூழல்கள், மெய்கண்ட நூல்களும் திருமுறைகளும் தோன்றிய காலத்தில் இல்லை. அந்தக் காலத்தில் தமிழ்நாட்டில்-இந்திய நாட்டில் முதலாளித்துவ சமுதாயம் தோன்றவில்லை. பண்ணையடிமைச் சமுதாயம் இருந்தது. பண்ணையடிமைச்சமுதாயத்திலும் கூட நுகர்வுகளின் எல்லை குறைவாக இருந்தமையினல் மூலதனம் தோன்ருமையினுலும் இத்துறையில் அதிககவனம் ஈர்க்கப்படவில்லை, இதனை,

"தென்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கும்
நடு நாள் யாமத்துப் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லாவொருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவுமெல்லாம் ஓரொக் கும்மே
செல்வத்துப் பயனே யீதல்
துய்ப்பே மெனினே தப்புந பலவே"

என்ற புறநானூற்றுப் பாடலால் அறியலாம். மார்க்சு காலத்தில் உலக நாடுகளுள், பல நாடுகளில் முதலாளித்துவ சமுதாயம் தோன்றிவிட்டது; பணப்புழக்கம் தோன்றிவிட்டது; படைப்புக் களங்கள் தோன்றிவிட்டன; நாடு விட்டு நாடு சந்தைக்குச் செல்லும் இயல்புகள் வளர்ந்துவிட்டன. இந்தச் சமுதாய அமைப்பில் சுரண்டல் முறை வலிமை பெற்றது. அதனுல் மார்க்சு இத்துறையில் நிறைய ஆய்வு செய்ய வேண்டியிருந்தது. சைவ சித்தாந்த ஆசிரியன்மார்களுக்கு அத்தகைய நெருக்கடி இல்லை.

ஊழ் என்பது என்ன?

சித்தாந்தச் சமயம் வினைகளின் வழியது உயிர்களின் வாழ்க்கை ஆக்கம் என்று கூறுகிறது. இத்தொடர்பாக நம்முடைய ஆய்விற்குரிய சொற்கள் மூன்று. அவை, முறையே வினை, விதி, ஊழ் என்று அமையும். "வினை" என்பது உயிர்கள் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற அகநிலை அறி கருவிகளாலும், மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற புறநிலைச் செயற்கருவிகளாலும் செய்யப் பெறும் செயல்களைக் குறிக்கும் அகநிலையிலும் புறநிலையிலும் உயிர், செயற்பாடின்றி யிருத்தல் இயலாத ஒன்று. ஒரோவழி புறநிலையில் "சும்மாஇருத்தல் இயலுமாயினும் அகநிலையில் "சும்மா இருத்தல்" இயலாது.

செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இரு சொல்லற என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே

என்பது அறிக.

இங்ஙனம் இயற்றப்பெறும் செயல்களுக்குரிய பயன்களைச் செய் தோரின் துய்ப்பிற்கு வந்தடைவதற்குரிய நியதியை ( Naturallaw ) "விதி" என்பர். செய்த வினைகளின் பயன்கள் விதிவழியில் செய்தோரின் அனுபவத்திற்கு வந்து சேரும் போது "ஊழ்" என்று பெயர் பெறு கிறது. செய்யும் வினைகளின் பயன்களுள் இம்மையிலேயே துய்ப்பனவும் உண்டு; மறுமையில் தொடர்வனவும் உண்டு. உயிர்ச் சார்பான நுண் ணுடம் போடு தொடர்புபட்ட கல்வி, அறிவு உணர்வு ஆகியன தாம் உயிரைத் தொடர்ந்து பலபிறப்புகளுக்குச் செல்லும் தன்மையுடையன. உடல் துய்ப்பிற்குரிய உலகியற் செல்வங்கள் உடம்போடு மட்டுமே தொடர்புடையன. அதனாலேயே "உடைமை" என்ற சொல் தமிழில் பிறந்தது. ஒருவர் இறந்துவிடின் உலகியற் சார்புடைய செல்வங்கள் மற்றவர் கட்புலனுக்கும் துய்ப்பிற்கும் உரியனவாகி விடப்பெற்று விடுவதை ஓர்க. உடம்பிலிருக்கும் உயிர் நீங்கியவுடனேயே அவ்வு டைமைகளுடன் இருக்கும் தொடர்பும் அறவே நீங்குவது அனைவரும் அறிந்த உண்மை. ஆனால், உயிரோடு தொடர்புடைய அறிவு முதலி யவற்றை, உடம்பும் உயிரும் இணைத்திருந்த காலத்திலும், அப்பொ ழுது செய்யப் பெற்ற செயல்களின் நிலைப்பாடுகள் வழியாகவும் மற் றவர்கள் அனுபவிக்க முடிகிறதே தவிர, இறந்தவரின் உயிரோடு தொடர்புடைய அவற்றை முற்றாக நாம் வாங்கிக் கொள்ள முடிய வில்லை;

" ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து"
" ஒருமையுள் ஆமை போல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்புடைத்து "

என்றார் திருவள்ளுவர் (வளரும்)

சிறுகதை

# கண்

யோ. பெனடிக்ற்பாலன்.

அகிலன் யாழ்ப்பாணத்தில் ஒரு பிரபல கல்லூரியில் ஆண்டு ஒன்பதில் கல்வி கற்கும் மாணவன். பதிமூன்கு வயது அவனுக்கு இன்னும் முடியவில்லை.

அவன் யாழ்நகரில் பிரபல பலசரக்குக் கடைவியாபாரி சிவசுப்பிரமணியத்தின் ஒரே மகன் என்பது அவனது கல்லூரியிலும் அவர்கள் வீடுள்ள வட்டாரத்திலும் தெரியும்.

ஆனால் அவனை அவனது வீட்டுச் சூழலில் அநேகருக்குத் தெரியாது.

அவன் ஒரு தனிப்போக்கு

வீட்டிலே கேட்ட கேள்விகளுக்கு இரண்டொரு வார்த்தைகளில் பதில் சொல்வான்.

நண்பர்கள் என்று அவனுக்கு அதிகம் பேர் இல்லை. அவனுக்குப் பிடித்த நண்பர்களுடனும் அளவளப்பாய்ப் பேசமாட்டான்.

அவர்களைப் பேசவிட்டு அவன் கேட்டுக் கொண்டிருப்பான்.

அவன் ஒரு அகமுகி; தன் மனதுக்குள் வாழ்பவன்.

ஆனால் பேசாமல் இருந்து நடப்பவற்றை அவதானிப்பான்.

எதைப்பற்றியும் எவரைப் பற்றியும் அபிப்பிராயம் கூற மாட்டான்.

அதனால் அவனது கல்லூரியில் அவனுக்கு 'அமுக்கு முட்டை' என்று பட்டம்.

அவனது சுபாவம் அப்படியிருந்த போதும் அவனை எவரும் வெறுப்பதில்லை. ஏனெனில் அவன் எவருக்கும் தீங்கு செய்பவனுமில்லை; நினைப்பவனுமில்லை.

அவனுடைய தகப்பனார் சிவசுப்பிரமணியம் ஊரறிந்த ஒரு முருக பக்தர். அவர் அதிகாலையில் எழுந்து அவர் வசிக்கும் வைமன் வீதியில், தெருநோக்கித் தலைகாட்டுகின்ற மல்லிகை மரங்களிலும் செவ்வ

ர்த்தை மரங்களிலும் பூத்திருக்கின்ற பூக்களைப் பறித்துக் கொண்டு போய் வீட்டிலே சுவாமி அறையில் முருகப்பெருமானின் திருவுருவப் படத்தின் முன்னே அர்ப்பணித்து நெற்றியிலும், தோள் பட்டைகளிலும், நெஞ்சிலும் திருநீறு பூசி காதிலே செவ்வரத்தைப் பூவைச் செருகி, கண்மூடி நின்று தன்வியாபாரம் சிறக்க அவரிடம் மன்றாடி, காலை எட்டு மணிக்கு முன்னர் கடைக்குப் புறப்பட்டு விடுவார்.

காலையில் ஒரு கிளாஸ் பால் குடிப்பார். உணவு எதுவும் சாப்பிடுவதில்லை.

கடையைப் பூட்டிவிட்டு வந்தால்; நல்லூர்க்கந்தனிடம் அளவு கடந்த பக்தி. நல்லூரானிடம் நினைத்த நேரமெல்லாம் போய் வருவார்.

வெள்ளிக்கிழமை காலையிலும் மாலையிலும் நல்லூரான் சந்நிதியில் அதிக நேரம் செலவிடுவார்.

' நல்லூரான் வீதி நடந்தால், வினைதீரும் ' என்று அடிக்கடி முனகிக் கொள்வார்.

இரவில் படுக்கையில் புரளும் போது தூக்கமில்லாவிட்டால், ஒவ்வொரு புரளலுக்கும் '' முருகா?'' என்று கூறிக் கொள்வார்.

யாழ் நகரில் உள்ள அவரது கடையின் பெயர் 'முருகன் ஸ்ரோர்ஸ்' அங்கு காலை எட்டு மணிக்குச் சென்று கடை திறந்தால் மனைவி பிள்ளைகளை மட்டு மன்றி முருகனையும் மறந்து விடுவார். கடைபூட்டும் வரை வியாபாரம் தான் எல்லாம். சந்தை நிலைமை; நாட்டு நிலைமைகளுக்கேற்ப விலைகளை மாற்றியும், பொருள்களை வெளியில் விடாதும் இலாபம் சம்பாதிப்பதில் அந்தக் கடை வீதியில் ' ஆள் ஒரு பேய்க்காய் ' என்று அவர் பெயரெடுத்தவர்.

வாடிக்கையாளர் அக்கடையில் விற்கும் பொருள்களின் தரத்தைப் பற்றிக் கேட்கையில் திருநீற்று முகத்துடனும் காதில் பூவுடனும் இருந்து அவர் கூறுவதை எவரும் சந்தேகிப்பதில்லை.

'' உங்களிடம் வாங்கிய அரிசி மூட்டையில் கல் அதிகம் ' என்று வாடிக்கையாளர் வந்து முறையிட்டால், கடையில் வேலை செய்கின்ற சிப்பந்திகளைத் திட்டித் தீர்ப்பார். வாடிக்கையாளர் எதுவும் கூறாது போய் விடுவார்கள்.

அவருக்கு முதல் மூன்றும் பெண்கள் குமர்ப்பிள்ளைகள். அவர்களுக்கு நல்லூரிலும் திருநெல்வேலியிலும் மூன்று பெரிய வீடு கட்டி வைத்துள்ளார். கேட்கின்ற சீதனம் கொடுத்து டொக்டர், இஞ்சினியரைக் கட்டிக்கொடுக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார்.

அகிலன் மூன்றாவது பெண்பிள்ளை பிறந்து ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் அருமையாய்ப் பிறந்தவன்.

அவன் மேல் அவருக்கு உயிர்.

அவனைச் செல்லமாய் வளர்த்தாலும் தனது வியாபாரத்தைப் பற்றியும் அறிந்திருக்க வேண்டு மென்ற ஆசையில் சனி ஞாயிறுகளிலும் விடுமுறை நாட்களிலும் கடைக்குக் கூட்டிச் செல்வார்.

அவனும் கடைக்குச் சென்று வியாபாரத்தில் தகப்பனுக்கு உதவி செய்திருக்கிறன்.

ஆனல் அகிலன் கடந்த ஆறு மாத காலமாக கடைப்பக்கம் செல்வதை நிறுத்திக் கொண்டான்.

தாயார் காரணம் கேட்டால் 'படிக்க வேணும்' என்று கூறி விடுவான்.

பிள்ளையின் படிப்பைக் குழப்பக் கூடாதென்று சிவசுப்பிரமணியமும் ஒன்றும் பேசுவதில்லை.

கொஞ்ச நாளாக அகிலனின் நடத்தையில் மாற்றம் ஏற்பட்டிருந்தது.

அவன் கோவில்களுக்குப் போவதை நிறுத்திவிட்டான்.

சாமிப்படத்துக்கு முன்னல் நின்று வணங்குவதில்லை.

நெற்றியில் திரு நீறு பூசுவதில்லை.

திருவிழாக் காலங்களில் நண்பர்களின் வற்புறுத்தலால் கந்தசாமி கோயிலுக்குப் போனதுண்டு; கும்பிடுவதற்கில்லை.

அவனின் மாறுதலை அவதானித்த தகப்பனர் 'ஏன் மோனே நீ இப்படிக் கோயிலை மறந்து விட்டாய்' என்று அவனிடம் கேட்டார்.

'நான் கோயிலை மறக்கவில்லை' என்று கூறிவிட்டுப் போய்விட்டான். தாயும் கவலையோடு காரணம் கேட்டாள். 'அப்படித்தான்' என்று அவளுக்குப் பதில் சொன்னன்.

'இவனை புரிந்து கொள்ள முடியாமல் இருக்கே' என்று தாயும் தகப்பனும் கவலை கொண்டனர்.

அவன் நாத்திகப் புத்தகங்கள் படித்ததாகவும் இல்லை.

வீட்டுக்கு வெளியே அதிக நேரம் திரிவதுமில்லை.

தகப்பனர் இந்த விஷயம் பற்றி ஏதாவது புத்திமதி கூறும்போது மௌனமாய் நின்று கேட்டுவிட்டுப் போய்விடுவான்.

ஒரு நாள் சிவசுப்பிரமணியத்தார் கந்தசாமி கோயிலுக்குப் போனபோது அவர் வசிக்கும் தெருவில் இருக்கும் 'புறக்டர்' சங்கரப்பிள்ளை என்ன நீங்களும் மனைவியும், பெண்பிள்ளைகளுந்தான் கோவில் குளம் ''எண்டு அலையிறியள் உங்கடை மகனை ஒரு நாளும் காணேல்லையே!'' என்று கேட்டு விட்டார்.

அது அவருக்குப் பெரும் கவலையாகப் போச்சு.

அன்று வீட்டுக்கு வந்து மனைவியைத் தனியாகக் கூப்பிட்டு அகில னின் போக்கையிட்டு மனம் நொந்து " நீ தான் அவனிடம் ஆறுதலாக கதைத்து, என்ன காரண மெண்டு ஒருக்கா அறியப்பா!" என்று கூறினார்.

அன்றும் ஒரு வெள்ளிக்கிழமை.

காலை பத்து மணியிருக்கும் அகிலன் தன் அறையிலிருந்து படித் துக் கொண்டிருந்தான்.

தாயார் மெதுவாக வந்து அவனுக்குப் பக்கத்தில் இருந்த கதி ரையில் அமர்ந்தாள்.

" தம்பி!"

'ம்'

" படிக்கிறியா? "

' ஓம் '

அவன் மேசையில் முழங்கைகளை யூன்றி நெற்றியில் கைவிரல் களைக் கோர்த்து வைத்துக் கொண்டு புத்தகத்தில் கண்விட்டிருந்தான்.

அவன் வந்தமர்ந்திருந்த தாயைத் திரும்பிப் பார்க்கவில்லை. அவன் அப்படித்தான்.

" இண்டைக்கி வெள்ளிக்கிழமை ராசா!"

" ஓம் "

"ஏன் ராசா இண்டைக் கெண்டாலும் கோயிலுக்குப் போகேல்லை"?

" — "

" படிக்கிற புள்ளை; கடவுளைத்தேடு சகலமும் உன்னைத் தேடும் எண்டு சொல்லுவினம்"

" சரிதான்!"

" அப்ப ஏன் கோயிலுக்குப் போறதை கும்பிடுறதை நிறுத்தினனி?"

"அப்படித்தான்!"

" அப்படித்தானெண்டால், நான் கேட்ட கேள்விக்கு உது தானே பதில்?"

"என்னைப் படிக்க விடுங்கோ பிறகு சொல்றன்!"

" மோனே, எனக்கு நீ பதில் சொல்லத்தான் வேணும் அவன் தாயின் முகத்தை ஒரு முறை பார்த்து விட்டுக்குனிந்து கொண் டான்

தாயார் பதிலுக்காகக் காத்திருந்தாள்.

நீண்ட நேர மௌனம்.

" உன்னையிட்டு அப்பாவுக்குப் பெருங் கவலை"

" இதிலை கவலைப்பட என்ன இருக்கு?"

'' தம்பி!''

'' ம் ''

'' அப்பா கடையிலை நிம்மதியா வியாபாரஞ் செய்ய மாட்டார். கடவுளிடை அருளாலை தானே கடை நல்லா நடக்குது; நாங்களும் மதிப்போடை இருக்கிறம்!''

'' சரிதான்!''

'' மோனே நீ ஏன் கோயிலுக்குப் போறதில்லை, சாமி கும்பிடுற தில்லை எண்டு அப்பா உன்னட்டைக் காரணம் கேட்கச் சொன்னவர் ராசா!''

தாயாரின் முகம் அவனைக் கெஞ்சியது.

அகிலன் குனிந்த தலை நிமிரவில்லை.

'' அம்மா!''

'' என்ன ராசா?''

'' அப்பாவுக்குச் சொல்லுங்கோ கடவுளுக்குக் காது மட்டுமில்லை கண்ணுமிருக்கெண்டு.

தாயார் விறைத்திருந்தாள்.

## இயம்பினர் ஒரு பால்!

ஒரு துறையின் விற்பன்னரைப் பற்றிய மதிப்பீட்டில் அவருடைய அறிவு அனுபவம் ஆளுமை முதலியவற்றோடு; பாரம் பரியப் பெறு மானமும் கணக்கில் எடுக்கப்படும் காலம் இது. ஆலயமணி ஆசிரியரை இந்தக் கோணத்தில் நோக்கும் போது; இவருடைய தந்தையார் சிறியதகப்பனர்கள் சைவத்தையும் தமிழையும் மக்களுக்குப் போதித்த தோடு அதற்கமைய வாழ்ந்து பிறரால் போற்றப்பட்டவர்கள். இவருடைய தாயாரும் தாய் மாமனும் கல்விக் கூடம் கட்டுவதற்கு காணி கொடுத்தும் உபகரணம் கொடுத்தும் பல ஆண்டுகளுக்கு முன்பு முன் உதாரணங்களாய் விளங்கியவர்கள். இவர் போனர் பகபதிப் பிள்ளைவிதானையார் கட்டிய கல்விக் கூடல்களில் பிராமணர்கள் வேதாகமங்களைப் படிப்பதற்காகத் தொடங்கிய வேதாகம வித்தியாசாலையும் ஒன்று. கல்வி வழிபாடு முதலியவற்றை நெறிப்படுத்திய பாரம் பரியத்தில் வந்தவர் தொடங்கியிருக்கும் ஆலயமணி இதழ் சிறப்பாக நடைபெறுவதற்கு நம்முடைய ஆதரவும் இணைய வேண்டும்;

Dr. ஆ. வேரின்பநாதன்
( புங்குடுதீவு அறிமுகவிழாவில் )

# திருக்குறள்

காமத்துப்பால்

(க) வள்ளுவனார் களவியல்

முதுபெரும் தமிழறிஞர் வித்துவான் பொன். அ. கனகசபை

## 2. பாங்கற்கூட்டம்

முன்தொடர்!......

இயற்கைப் புணர்ச்சியாகிய சிவகுரு தரிசனம் பெற்ற பக்குவான்மா, 'சிவத்தை யாம் என்றும் பிரியாமல் வாழவேண்டும்' எனத் தெளிந்து சிவதீட்சைகளாலும், ஞானோபதேசங்களாலும், சிவயோகத்தாலும் அனவரத தியானமாகிய வரைதலைச் செய்து கொள்ளுதலே சிறந்தமுறை. அவ்வாறு அறிவு தெளியாதாயின், பாங்கன் போன்ற தற்போத அகற்சியாலேனும் இடந்தலைப்படுதலாலேனும் சிவத்தை அடையும்,

விதித்துணையோடு, பாங்கனாகிய தற்போத அகற்சி வாயிலாகச் சிவத்தை அடைவதைப் பாங்கற்கூட்டம் என்பர். தற்போத அகற்சி இல்லாமல், விதியே துணையாக நிகழ்வது இடந்தலைப்பாடாகும். இவ்விருவகை ஒழுக்கங்களும் ஒன்றன்பின் ஒன்றாக நிகழா. இரண்டனுள் ஏதேனும் ஒன்றே நிகழும். இவற்றைக் கூறுமிடத்துச் 'சுருங்கச் சொல்லல்' என்னும் அழகு பற்றித் தற்போத அகற்சியாகிய பாங்கற் கூட்டத்திற்கே சிறப்பான செய்திகளை முதலிலும், இரண்டிற்கும் பொதுவானவற்றை இடையிலும், இடந்தலைப்பாட்டிற்குச் சிறந்தவற்றை இறுதியிலும் அமைப்பது வழக்கம்.

( முதலிற் பாங்கற் கூட்டத்திற்குச் சிறப்பான செய்திகள் கூறப்படுகின்றன. )

தற்போதம் என்பது சுட்டியறியும் ஆன்ம அறிவு, பக்குவான்மா சிவத்தோடு கலந்து அனுபவித்த சிவபோகத்தைத் தன்னறிவாலே காணலாமென ஆணவ முனைப்பாக முயலும்; முயன்று சிவபோக அனுபவத்திற்குத் திருவருளே துணையாகுமன்றித் தற்போதமாகிய தன்னறிவு துணையாகாதெனத் தெளிவாக உணரும். அவ்வாறு உணர்ந்து தற்போதம் அகலுதலே பாங்கற்கூட்டம் எனப்படும். ( தற்போதமே பாங்கன். மனம், நெஞ்சு என்பனவும் சிலவிடத்துப் பாங்கன் எனப்படும் )

" பாங்கற் கூட்டம் ... ... இன்பம்
தாங்குதற் போதம் தான்கண் டகறல்"

என்பது பேரின்பக்கோவை.

இயற்கைப் புணர்ச்சி இறுதியில் பக்குவான்மா பரவெளியையும், ஞானியர் சூழலையுங் கண்டது. அச்சூழலிற் சிவத்தை அடைவதற்கு அதன் தோழியான திருவருளைப் பார்க்கிலும், தன் அறிவாகிய பாங் கனே தனக்குப் பெரிதுந் துணையாவான் என நினைந்து அவனை அணைந் தது. தற்போதமாகிய பாங்கன் பக்குவான்மாவை உற்று நோக்கி, உள்ஞான ஆற்றல் மெலிந்தது ஏன்? என வினவினன்.

சிவம், 'சகளத்திருமேனியைத் தியானித்த என் கிரியை யோகங் களை அகற்றித் தன் சிவபோகத்தைத் தந்தது. நிஷ்களத்தியானத்தில் என்னை நிலைக்கச் செய்ததால் ஆற்றல் மெலிந்தது' எனப்பக்குவான்மா தனக்கு உற்றதை உரைத்தது.

திருவருளால் நிகழ்ந்த அதனை உணருமாற்றலில்லாத தற்போதம் 'ஞான சாதனங்களாகிய சரியை கிரியை யோகங்களை உணர்ந்த நீ, இவ்விதமாக உன்நிலை இழத்தல் தகாது' என இடித்துரைத்தது.

சிவம் எனக்கு உருவாகவும், அருவுருவாகவும், அருவாகவும் அனுப வப் பண்பாகவும், வெளிப்பட்டு அருளியது. அதை நான் பதி ஞான மாகிய கண்கொண்டு உணர்ந்தேன். நீ தற்போதம் ஆதலால், உன் னால் அதை உணரவும் பார்க்கவும் முடியாது;

சிவபோகம் பரஞானப் பெருவெளியிற் பரம்பொருளோடு சார்ந்து நின்று அனுபவிப்பது; அது மாயாதீத துன்பக் கலப்பற்ற சுத்தானந்தம்; நித்தியானந்தம்; ஆணவங்கலந்த தற்போதமாகிய உனக்குப் பிரகிருதி மாயா காரியமான தாமரைக் கண்ணன் உலக இன்பமே அனுபவமாகும்; வைகுந்த போகம், இந்திரபோகமாதியன துன்பங் கலந்த இன்பங்கள்; அநித்தியமானவை. வீடு காதலித்துப் பேரின்பம் பெற நிற்கும் யான், கீழான பிரகிருதி தத்துவ பரியந்தம் அநுபவமாகும் மாயாபோகத்தை எள்ளளவும் விரும்பேன்.

யான் விரும்பிச் சாரும் சிவசக்தியின் பேரின்பம் போலத் தாம ரைக் கண்ணன் உலக இன்பம் இனிதாயிருக்கவே இருக்காது.

"தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணன் உலகு" – ( திருக்குறள்-1103)

என்று நிலையிழத்தல் தகாதெனை இடித்துரைத்த தற்போதமாகிய பாங்

னுக்குப் பக்குவான்மா, 'அது தற்போதத்தாற் காணும் பொருளன்று' என எதிர்மறுத்து உரைத்தது.

ஞானநிலையிலுள்ள பக்குவான்மாவின் சிவபோக அநுபவக் கூற்றை உணர்ந்து கொள்ள இயலாத தற்போதம், மீண்டும் தன்னிலையிலே நின்று "என்றுமே கலங்காத உள்ளங் கலங்கி வருந்துவது என்னே" எனக் கவன்று உரைத்தது. அதனைக் கேட்ட பக்குவான்மா தற்போதமாகிய தன் நெஞ்சோடு ஒன்றி, "எதற்குங் கலங்காத யான், இன்று சிவத் தலைவியின் கருணைக்கண்ணால் இவ்வாறு கலங்கினேன், அவள் காட்டிய கருணையால் என் அறிவு இழந்து சிவப்பேரறிவு பெற்றேன்; அவ்வாறு யான் பெற்ற பேரறிவு நெடிது நிலைத்துநில்லாமையால் இவ்வாறாகினேன்" என்று உருகி உரைத்தது. பின்னரும் ஒருவர் ஒருவராய்ப் பேதலித்தும், நொந்தும் உரையாடின. பக்குவான்மா சிவத்தலைவியிடங் கொண்டுள்ள மாறாத காதலின் உறுதியைக் கண்ட தற்போதமாகிய பாங்கன், நின்னை இவ் வண்ணஞ் செய்த சிவத்தலைவியின் இடம் எது? இயல் யாது? என வினவினான்.

பக்குவான்மா இயற்கைப் புணர்ச்சியிற் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறிந்து, மகிழ்ந்த ஐம்புல இன்ப நலத்தை உருவகித்துப் புனைந்து உரைக்கலாயிற்று. பசுந்தளிர் மேனி, தூய ஞான மணி வாக்கு, சிவகந்தம், ஞானநோக்கு, அருளங்கம் எனச் சிவத்தலைவியில் இயல் நலங் கூறிற்று.

"முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோள் அவட்கு" –(திருக்குறள் 1113)

என்று கூறக்கேட்ட தற்போதமாகிய பாங்கன், சிவபோதத்தாற் காணத்தக்க சிவத்தலைவியைத் தன் அளவில் முனைத்து நின்று, தான் சென்று கண்டு வருவதாகக் கூறியது. அருட்கண்ணாற் கண்ட பக்குவான்மா உரைத்த குறிவழியே சுத்த துரியாதீதமாகிய பேரின்பப் பொழிலிடத்துச் சென்று சிவத்தலைவியைக் கண்டது. பக்குவான்மாவே ஞானவான் என வியந்தது. தற்போதமாகிய தன்னால் சிவத்தைப் பொருந்த முடியாது எனத் தெளிந்து, திரும்பி வந்து, பக்குவான்மாவை விரைந்து சென்று பொருந்துமாறு அறிவித்தது. அறிவித்த அளவில் தற்போதங் கழன்று போகப் பக்குவான்மா சிவகுரு தரிசனங்காண விரும்பிச் சென்றது.

(பாங்கற் கூட்டத்திற்கும் இடந்தலைப்பாட்டிற்கும் பொதுவான செய்திகள் கூறப்படுகின்றன.)

பெத்தநிலையில் சிவம் அவ்வுயிரேயாய் நின்றது போல முத்தி நிலையில் பக்குவான்மா (சிவோகம் பாவனை செய்து சிவம் விளங்கித் தோன்ற இறைபணி நின்று) அச்சிவத்தோடு ஏகனுகி (ஒற்றித்து) நின்று சிவபோகம் அநுபவித்தது. அச்சிவபோகத்தை வாசனு மலத் தாக்கத்தால் சிறிது அகன்ற உயிர் மீட்டும் பெறவரும் எனத் திருவு ளங் கொண்டு, சிவம் தன்நிலைவிட்டு இறங்கி வந்து ஞானப்பொழிலில் நின்றது.

பக்குவான்மாவும் திருவைந்தெழுத்துச் சிந்தனை, திருவருள் உப காரம், தற்போத வீழ்ச்சி என்பவற்றால் வாசனை கழிந்து தூயநிலைய டைந்து சிவஞானப் பொழிலிடையே சென்று சேர்ந்து சிவத்தைத் தரிசித்தது.

உபதேச மொழிபெற விரும்பிய பக்குவான்மா சிவத்தைப் புகழ்ந் தது. புகழக்கேட்ட சிவம், நாணியது போல் ஒருவழி ஒதுங்கியது. பக்குவான்மா, அச்செயலைக் கண்டு மிகமிக வருந்தியது. உயிர் வருத் தத்தால் தன் நாணம் நெகிழ்தல் கண்டு சிவம் வருந்தியது. சிவம் கருணை கூர்ந்து கனிந்து விளங்கியது. அதனைச் சாதகமாகக் கொண்டு பக்குவான்மா, சிவத்தின் திருக்கண்களைக் குவளைமலர்கள் ஒவ்வா என அவற்றைப் பழித்துச் சிவத்தைச் சார்தலுற்றது.

குவளை மலர்கள் காணுந் தன்மையும், நாணும் இல்லாமையால் 'யாம் அழகுடையோம்' என்று தம்மைத் தாமே மதித்து வான் நோக்கி அண்ணாந்து செம்மாந்து நிற்கின்றன. இம்மலர்கள் மாயா காரிய பூத பரிணாமங்கள்; சிவத்தைச் சாரும் அருகதையற்ற தாவர வர்க்க ஓரறிவுயிர்கள்; ஒரு நாள் வாழ்வுக்கு உலமருவன. சிவத்தலை வியின் திருக்கண்களோ நின்மல துரியாதீத ஞானபரமானவை; கரு ணையாற் கனிந்து விளங்குபவை; பாச நீக்கஞ் செய்து பேரின்பத்திற்கு வாயிலானவை; நித்தியமானவை. குவளைமலர்கள் நாணமுறும் பண்பும், பார்க்குந் தொழிலும் உடையனவாயின் சிவத்தலைவியின் திருக்கண் களின் உயர்வற உயர்ந்த சிறப்பையும், தமது மிகமிகத் தாழ்ந்த இழி வையுங் கண்டு நாணித் தலைகவிழ்ந்து நிலத்தினை நோக்கும். அதா வது தலைவணங்கித் திருநோக்குத் தீட்சையால் பக்குவமடைந்து, நின் மல துரியா தீத ஞானநிட்டை புரியும். நிலம் – ஞான பூமி.

> "காணிற் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
> மாணிழை கண்ணொவ்வேம் என்று" (திருக்குறள் 1114)

சிவபரம் பொருளைச் சாரும் பரிபாகம் இல்லாத குவளையாகிய ஓரறி வுள்ள உயிரை விலக்கிப் பக்குவான்மா, கருணை நெகிழ்ந்து உடன் பாடு தெரிவித்த சிவத்தைச் சார்ந்தது.

விண் ஆளும் இன்பமும் மண் ஆளும் இன்பமும் ஈடாகாத சிவப் பேரின்பத்தின் இன்றியமையாமையைப் பாராட்டிக் கூறிய பக்குவான்மா, வாசனாமலத் தாக்கத்தால் சிவம் தனக்குப் புலப்படாது மறைந்து, மெய்யடியார் கூட்டத்துக் கலந்து விளங்குவதை உணர்ந்தது. சிவத்தின் பிரிவுத் துயரவெப்பம் உள்ளத்தைச் சுட்டது. உறவாடும் மெய்யன்பர்களுக்குக் குளிர் நிழலாய்த் தண்ணென்று இருக்குமென அநுமானித்தது. உலகத்துத் தீயானது அணுகினால் மாத்திரம் சுடும். அகன்றால் சுடாது குளிரும். இந்தச் சிவமோ அகன்றால் சுடுகின்றது. அணுகினால் குளிருகின்றது.

"நீங்கின் தெறூஉங் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்" (திருக்குறள் 1104)

பக்குவான்மா சிவத்தைக் கூடாமுன் துயரவெப்பச் சூட்டையும், அதைக் கூடிய பின் இன்பக் குளிர்ச்சியையும் அநுபவத்தில் அறிந்தது. எங்கும் நிறைந்துள்ள சிவம் மறக் கருணைத் தீயால் சுடச்சுட வினைமாசு நீங்கி ஞானஒளி மிகும். அந்த ஞானப் பயிருக்கு அறக்கருணை நீர் பாய்ச்சி வளர்த்து உள்ளங்குளிர பேரின்ப விளைவையாக்கும். இதுவே கருணாநிதியாகிய சிவத்தின் இயல்பு.

அடுத்த ஆலயமணியில்.........!

# இரஞ்சகுமாரின்

சிறுகதை

# மோகவாசல்

வருகிறது

# காரைக்காலம்மையார்

க. நா. சுப்ரமண்யம்

தத்துவ தரிசனம் எந்தச் சமயத்தில் எப்படிக் கவிதையாகிறது என்பதை உலகத்திலுள்ள பலமொழிக் கவிகளிடமிருந்து நிதரிசனமாக விளக்க முடியும். வார்த்தை, ஓசை முதலியனவற்றிற்கும் அப்பால் கவிதைக்கு ஒரு ஆத்மா இருக்கிறது - அந்த ஆத்மாதான் கவிதையிலே முக்கியமான அம்சம் என்று சொன்னால் சுலபமாகவே எல்லோருமே ஏற்றுக் கொண்டு விடுவார்கள். இந்தத் தத்துவ ஆத்மா இருக்கிறதே இது எல்லா மொழிக்கவிகளுக்கும் ஒன்றுதான். ஆங்கில ஷேக்ஸ்பியரும் சரி, இத்தாலிய டாண்டேயும்சரி, தமிழ்க் காரைக்கால் அம்மையாரும் சரி—எல்லாருமே ஒரு ஆத்ம மானஸரோவரிலிருந்துதான் தங்களுடைய கவிதைக் கங்கையைக் கொணருகிறார்கள்.

உலகத்திலுள்ள ஞானமெல்லாம் எப்படி ஷேக்ஸ்பியருக்கு வந்தது என்று அவர் கவிதையைப் படித்து ஆச்சரியப்பட்டுக் கேட்பவர்கள் உண்டு. இந்தக் கேள்விக்குப் பதில் சொல்கிற வகையில் ஷேக்ஸ்பியர் ஷேக்ஸ்பியரே அல்ல என்றும். வேறு எல்லாம் தெரிந்த வசதியுள்ள ஒருவர் என்றும்சிலர் பதிலும் சொல்வதுண்டு. அதற்கு அவசியம் இல்லை. மனித குலத்துக்கெல்லாம் பின்னாலுள்ள ஆத்ம ஞான மானஸரோவரை எட்டி அணுகக் கற்றுக் கொண்ட கவிக்குக் கவிதை அற்புதமாகத்தான் அமையும் — அது டாண்டேயானால் என்ன ஷேக்ஸ்பியரானால் என்ன, காரைக்காலம்மையார் ஆனால் என்ன?

நூலறிவு பேசி நுழைவிலா தார்திரிக
நீலமணி மிடற்றான் நீர்மையே — மேலுலகத்(து)

எக்கோலத் தெவ்வுருவில் எத்தவங்கள் செய்வார்க்
அக்கோலத் தவ்வுருவே யாம் [கும்

என்று அற்புதத் திருவந்தாதியில் பாடுகிற காரைக்கா லம்மையாரை மனித ஞான மானஸரோவரைக் கண்டவர் என்று தான் சொல்ல வேண்டும்.

கலை, இலக்கியம் இவை போலவே, தெய்வத்துக்கும், உருவமும் உருவமின்மையும் தான் அற்புதமான லக்ஷணங்கள். வேறு இலக்கணமே இதற்குத் தேவையில்லை. என்று சொல்லி விடலாம்.

ஏதொக்கும் ஏதொவ்வா தேதாகும் ஏதாகா(து)
ஏதொக்கும் என்பதனை யாரறிவார்

யார் அறிவார்? ஆனால் வார்த்தைகளுக்கு அகப்படாத ஒன்று உருவம் எடுக்கிறது. எடுக்கிற இடமும் உண்டு. காரைக்காலம்மையார் கவிதையிலே - ஷேக்ஸ்பியர் கவிதையில் சிவன் கிராதனாகி அர்ச்சுனனுடன் போர் தொடுத்த போது

—பூதப்பால்

வில்வேடனாகி விசயனோ டெற்றநாள்
வல்வேடனாய வடிவு.

உலக மொழிகள் எல்லாவற்றிலுமே கவிதை வார்த்தைகளில் அகப்படாத ஏதோ ஒன்றுக்கு வார்த்தையும் வடிவும் தர முயலுகிறது. தெய்வம் தேடி, பக்தி செய்கிற முயற்சியும் அதேபோல ஒன்றுதானே? அதில் என்ன சந்தேகம்? காரைக்காலம்மையார் கவிதை வடிவு கண்டவர்—வடிவமில்லாமையும் கண்டவர் அதை மாற்றி மாற்றிஅவர் அமைத்துப் பாடி அற்புதத் திருவந்தாதியைக் கவிதையாகவும் தத்துவமாகவும் நமக்குக் காட்டுகிற காட்சி மகத்தானது.

அன்று திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றுந் திருவுருவம் காண்கிலேன்

என்று சொல்கிற கவியேதான் நமக்குச் சிவபிரானுடைய கழுத்திலே உள்ள மறுவையும் காட்டுகிறார். மறுவை மட்டும் கண்டால் போதுமா? முடிமேல் மதியும் கழுத்திலே நாகங்களும் தான்புலனாகின்றன.

கலங்கு புனற்கங்கை யூடாடலசனும்
இலங்கு மதியிலங் கலானும்—நலங்கொள்
பரிசுடையான் நீள்முடிமேல் பாம்பியங்கலானும்
விரிசடையாம் காணில் விசும்பு.

என்றும்,

அழலாட அங்கைசிவந்ததோ அங்கை
அழகால் அழல்சிவந்த வாறோ

என்றும் சொல்ல முடிகிறது கவிக்கு.

உருவத்தையும் உருவமின்மையையும் டாண்டேயாலும், இதே அழகுடன் சுவர்க்கத்தில் வைத்து ஒரு கிறிஸ்துவசாஸ்திரப் பயிற்சியுடன் சொல்ல முடிகிறது. காரைக்காலம்மையாரில் இதே அழகும் ஆத்மாவும் தத்துவமும் சிவபிரான் பெயரால் வெளியாகின்றன. அவ்வளவு தான் வித்தியாசம் இரண்டையும் (ஒன்றை இத்தாலிய மொழியிலும், மற்றதைத் தமிழ் மொழியிலும்) அனுபவிக்க முடிகிறது. ஆத்ம ஞானத்தை முட்டும் இந்த இலக்கிய அனுபவம் அருமையானது, அற்புதமானது என்று சொல்ல வேண்டும்.

டாண்டே மட்டுமல்ல—காரைக்காலம்மையாரும் கம்பனும் சொல்லுகிறார்கள். அதைத்தான் விசேஷமாகச் சொல்லவேண்டும். காலத்தால் காரைக்காலம்மையார் இரண்டொரு நூற்றாண்டுகள் டாண்டேக்கு முன்பிருந்தவர். அந்த அழகையும் சற்றுக் கவனிக்கலாம். இந்தக் கவனிப்பு விஷயமும் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு விஷயம் தான் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். நூலறிவு பேசுகிற காரியம் தான் இது— என்றாலும் பார்ப்போம்.

உருவம் சரி—உருவு இல்லாமை சரி அதேபோல விரிந்தும் குறுகியும் நிற்கும் திறந்தான் எங்கே? எப்படி வார்த்தையில் அடைப்பது.

வானத்தான் என்பாரும் என்க மற் றும்பர்கோன்
தானத்தான் என்பாரும் தாமென்க—ஞானத்தால்
முன் நஞ்சத்தாலிருண்ட மொய்யொளிசேர் கண்டத்
[தான்
என் நெஞ்சத்தான் என்பேன் யான்.

'யான்' என்கிற அரங்கு போதும் அவனுக்கு—கலைக்கு—கவிதைக்கு—இலக்கியத்திற்கு. ஆனால் அவன் உருவெடுத்து சிலசமயம் அரங்கு ஆற்றுது, டாண்டே கண்களை மூடிக்கொள்கிறார் தன் கவிதையிலே—காரைக்காலம்மையார் திசைகளையே சிதறி விழச் செய்கிறார்:

அடிபேரிற் பாதாளம் பேரும் அடிகாள்
முடிபேரில் மாமுகடுபேரும்—கீடகம்
மறிந்தாடு கைபேரில் வான்திசைகள் - பேரும்
அறிந்தாடும் ஆற்றுது அரங்கு.

ஆத்ம மானஸரோவரை எட்டிப் பிடித்து விட்டோம்—"இன்று நமக்கெளிதே" என்று பாடுகிறார் காரைக்காலம்மையார். ஆமாம். இன்று நமக்கெளிதே, டாண்டேக்கும், காரைக்காலம்மையாருக்கும், ஷேக்ஸ்பியருக்கும் பிறகு என்று சொல்லத் தோன்றுகிறது.

காரைக்காலம்மையாரைப் பற்றி, மந்திர மாம் பழக் கதைகளுண்டு. அவரே தன்னை காரைக்கால் பேய் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ளுகிறார், சிவகணங்களில் ஒன்றாகத் தன்னை நினைத்து, அரனாடும் அரங்கைத் தன்நெஞ்சாக நினைத்த காரைக்காலம்மையார், "அரங்கமாய்ப் பேய்க்காட்டில் ஆடுவான்" என்று கூறி உலகையே திருவாலங்காடாகவும் ருத்திரபூமியாகவும் காட்டுகிறார். அந்த விந்தையை ஒரு பத்துப் பாட்டுகளில் பார்க்கலாம்.

(இன்றைய நகரத்து வாழ்க்கையை மகாமசானம்

என்கிற ஒரு பகைப் புலத்தில் கண்ட ஒரு சிறுகதை ஆசிரியர் நமக்கு ஞாபகம் வருகிறது. இந்தப் பாட்டுக்களைப் படிக்கும் போது) அற்புதத்திருவந்தாதியை pardise என்று சொன்னால் மூத்ததிருப்பதிகத்தைத் தன்மை சிறிதும் மாருத Inferno என்று சொல்லலாம். ஆனால் மனித சங்காத்தம் இல்லாத Inferno அது. நரகம் அல்ல-நல்லது தீயதன் விளைவு அல்ல—வெறும் வார்த்தைகளால் விளைந்த நரகம் " ஆகங்குளிர்ந்தனலாடு மெங்கள் அப்பனிடந் திருஆலங்காடே" என்று பாடுகிற காரைக்காலம்மையார் வார்த்தைவிந்தைகள் எத்தனை செய்து காட்டியிருக்கிருர் என்பதை இந்தப் பத்துப் பாட்டுக்களிலே அறிந்து கொள்ளலாம்.

சிவன் என்கிற மரபையும், தத்துவம் என்கிற உண்மையையும் கைவிட்டு விடாமல் காரைக்காலம்மையார் தமிழில் அற்புதமாக நமக்குக் கவிதை செய்து தருகிருர். பக்தியை மீறிய ஒரு கவிதைப் பாவம் காரைக்காலம்மையாரிலே கனிந்திருக்கிறது. அனுபவிக்கப் பழகிக்கொள்பவர்கள் பாக்கியசாலிகள்.

"அண்டமுடி நிமிர்ந்தாடும்" அந்த ஒன்றை அறிந்து கொள்ள உலகத்துச் சிறந்த கவிகளிலே ஒருவராக நமக்குக் காரைக்காலம்மையார் பயன்படுகிருர்.

நன்றி

க. நா. சு. விமரிசனக்கலை

1959

# ஜெயராஜ் பதில்கள்

க.செந்தூரன் கல்வியங்காடு

*கேள்வி:- பிறசமயங்களின் ஊடுருவல் சமயமாற்றம் என்பவை பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?*

பதில்:- அவை நடப்பது உண்மையே. வருத்தத்திற்கும் உரியதே. அதைக் கண்டிக்க வேண்டும். அதற்கு முன் எம்முள் சிலமாற்றங்களை கொணர்ந்தே ஆக வேண்டும். அண்மையில் ஒரு கோயிலுக்குச் சொற் பொழிவுக்காகச் சென்றிருந்த போது நான் அறிந்தது. நான் சென் இந்துக் கோயிலின் நேர்முன்னால் பிறசமயக் கோயில் ஒன்று கட்டப் பட்டிருந்தது. என்னை அழைத்தவர்கள் அதைக் கண்டித்துப் பேச வேண் டும் என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறினர். இந்துக் கோயிலுக்கு நேர் எதிரே பிறசமயக் கோயிலைக் கட்டியது எனக்கும் பிழையாகவே பட்டது. அதைக் கண்டிக்க வேண்டும் என நான் நினைத்திருக்கையில் ஒரு பெரியவர் என் அருகே வந்து ஒரு செய்தியைக் கூறினார். நான் சென்ற அந்தச் சைவ ஆலயத்தினுள் பிற்பட்ட மக்களை இன்றுவரை விடுவதில்லையாம். (என்னிடம் பிற சமயக் கோயிலைக் கண்டிக்க வேண் டும் என்று கூறியவர்களே தரும(?) கர்த்தாக்கள்) இத்தனைக்கும் அவ் வாலயச் சுற்றாடலில் முழுக்க முழுக்க பிற்பட்டவர்களே வாழ்கின் றார்கள். அவர்களில் சென்ற தலைமுறையை சேர்ந்தவர்கள் கோயி லுக்கு வெளியே நின்று கும்பிடுவார்களாம். ஆனால் இன்றைய தலை முறையோ கோயிலுக்கு வருவதையே விட்டு விட்டதாம் இந்த நிலை யில் அந்தக் கோயிலுக்கு முன் பிறசமய கோயில் கட்டப்பட்ட, அவர் கள் அங்கு சென்று வழிபடுவதாகக் கூறி மனம் வருந்தினார்.

நான் என்னை அழைத்தவர்களை அணுகி அவர்களை உள்ளே விடும் படி கேட்டுக் கொண்டேன். அது பற்றிப் பேசவா என்றும் கேட் டேன். அதற்கு பிறசமயக் கோயில் வந்ததுபற்றி உணர்ச்சி வசப்பட்ட அவர்கள் ''அவன்களை கோயிலுக்குள் விடுவதுமட்டும் நடக்காது'' என்று அடித்துக் கூறிவிட்டனர்.

இந்தச் சம்பவத்தை உதாரணமாக வைத்துக் கொண்டுகூறுவேன். ஒரு உடலில் நோய் பிடிப்பதற்கு நோய்க்கிருமிகள் மட்டும் காரண

மல்ல. நோய்க் கிருமிகள் தாக்கக் கூடிய வகையில் உடல் பலவீனமாக இருத்தலும் காரணமாகும். பிற சமயம் ஊடுருவுவதைக் கண்டிப்ப தற்கு முன் எமது சமயத்தவரின் இத்தகைய மூடக் கொள்கைகளை இந்து சமயப் பெரியோர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து வன்மை யாகக் கண்டிக்க வேண்டும். அத்தகைய கோயில்களுக்குச் செல்லா மல் அறிஞர்கள், சமயப் பெரியார்கள், கலைஞர்கள் ஆகியோர் பகிஸ் கரிக்க வேண்டும்.

அனைத்து உயிர்களும் இறைவனால் படைக்கப்பட்டதை ஒத்துக் கொண்டபின், அவற்றுள் உயர்வு தாழ்வு கற்பிக்க எந்த ஒரு மனித னுக்கும் உரிமையில்லை. ஒரு இனம் இறைவனை வணங்க வேறு ஒரு இனம் அனுமதிக்க வேண்டும் என்ற பேச்சே, 21ஆம் நூற்றாண்டுக்குள் காலடி வைக்கும் இக் காலகட்டத்தில் காட்டுமிராண்டித் தனமானது

பெரிய புராணத்தில் நந்தனார் வாழ்க்கைச் சரிதத்தைப் படித்த பின்பும், நாம் திருந்தா விட்டால் சேக்கிழாருக்கும் சைவத்துக்கும் தோல்வி என்பது மட்டுமல்ல. இன்றைய முற்போக்காளர்கள் சிலர் நந்தனை அந்தணர்கள் கொண்டு போய் எரித்து விட்டார்கள் என்று கொச்சையாகச் சொல்வதையும் கேட்டுக் கொண்டிருக்க வேண்டியது தான்.

சோ. நரேந்திரன். சண்டிலிப்பாய்.

கேள்வி:- சிவனடியார் ஆகிய இராவணனை இழிவுபடுத்தும் கம்பரா மாயணத்தைப் படிப்பது சைவத்தை இழிவுசெய்வதாகாதா?

பதில்:- உங்கள் கேள்வியில் மூன்று பிழைகள்.

(i) இராவணன் சிவனடியார் இல்லை.
(ii) கம்பன் இராவணனை இழிவுபடுத்தவில்லை.
(iii) மற்றவர்களால் இழிவுபடுத்தக் கூடிய எல்லையில் சைவம் இல்லை.

மற்றவர்கள் சொல்வதை விட்டு விட்டு உங்கள் சுய சிந்தனையால் ஆராயுங்கள் நான் சொல்வது சரியெனத் தெரியும்.

க. திருமாறன். வட்டுக்கோட்டை

கேள்வி:- அண்மையில் உங்களை ஆச்சரியப்படுத்திய காட்சி எது?

பதில்:- உண்மையில் தமிழ்நாடு சென்றபோது அண்ணா சமாதியைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. கடவுள் இல்லை என்ற கொள்கை யைப் பரப்ப தன் முழு ஆற்றலையும் பயன்படுத்தியவர் அண்ணா. தன்னுடைய இக் கருத்தை முன் வைத்து பல சமயவாதிகளை தேர்

தலில் தோற்கடித்தவர். தன் பேச்சாற்றலால் தமிழ் நாட்டு மக்களின் மனம் நிறைந்த தலைவரானவர். அவர் சமாதியில் ஒரு காட்சி என்னை ஆச்சரியப்படுத்தியது. அவர் நினைவாக வைக்கப்பட்டிருக்கும் அணையா ஜோதியில குவியலாக அங்கு வரும் மக்கள் பலர் கற்பூரமிட்டு தொட்டுக் கும்பிட்டு சமாதியின் மேல் காணிக்கையும் இட்டு விழுந்து கும்பிடுவதைக் கண்டு ஆச்சரியப்பட்டேன். அண்ணு என்ற ஆற்றலுடைய தலைவனை அங்கீகரித்ததோடு அவரின் தனிப்பட்ட கடவுட் கொள்கையை முற்றாக நிராகரித்து அவரையே கடவுளாக்கும் அந்த மக்களை பாமர மக்களா? அல்லது படித்த மக்களா? எனத் தீர்மானிக்க முடியாமல் வியந்தேன்.

க.வசந்தகுமார், நல்லூர்

கேள்வி:- அகில இலங்கை இந்துமா மன்றத்தின் மாநாடுபற்றியும் அவர்கள் நிறைவேற்றியுள்ள பிரேரணைகள் பற்றியும் உங்கள் கருத்து

பதில்:- பலகாலமாக சமய அமைப்புக்கள் பலவும் உறங்கிக் கிடந்தன. அகில இலங்கை இந்துமா மன்றத்தின் மாநாடும் யாழ்/இந்துக் கல்லூரி திருமுறை மாநாடும் சைவ மக்களின் முன் பல இலட்சியங்களை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுள்ளது.

அவர்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்!

அத்தோடு ஒருசில அறிவுரைகள்

(i) மூடக் கொள்கையுடைய பழமை வாதிகளை அமைப்புக்குள் பலம் பெற விடக்கூடாது,

(ii) முன்னைப் பழமைக்கும் முன்னையதாய் பின்னைப் புதுமைக்கும் பின்னையதாய் இந்து சமயத்தை கையாள முன்வர வேண்டும். அப்போதான் இளம் தலைமுறை அமைப்பின் பின்னே அணிசேரும்.

(iii) பிற இடங்களில் இருந்து இந்து சமயத்துக்கு வரும் இடையூறுகளைத் தடுப்பதில் காட்டும் அதே தீவிரத்தை, உள்ளேயே இருக்கும் குற்றங்களைக் களைவதிலும் காட்டத்தயங்கக் கூடாது.

(iv) எந்த ஒரு அமைப்பும் வெற்றிகரமாய் நடைபெற பொருளாதாரம் அடிப்படை. அதற்கான ஒழுங்கை கற்பனையிலும் வாய்ப்பேச்சிலுமன்றி யதார்த்தமாகத் திட்டமிட வேண்டும். இந்துசமயத்துக்கு சொந்தமான பல சொத்துக்கள் கேட்பார் இன்றிச் சிலர் கைக்குள் முடங்கிப் பயனற்றுக் கிடக்கின்றன. அவற்றை மீட்டு அமைப்பின் வளர்ச்சிக்கு பயன் படுத்தலாம்

(v) அன்பு, பொறுமை, விடாமுயற்சி, இலட்சியப் பற்று என்பவற்றை உள்ளத்தில் இயல்பாகப் பெற்றவர்களை அமைப்பின் தொண்டர்களாய் ஆக்க வேண்டும்.

[இலட்சிய மற்ற பலர் தொண்டராவதை விட இத்தகையோர் சிலராயினும் அவர்களால் அமைப்புப் பலம் பெறும்]

(vi) அகில இலங்கையும் வியப்புறும் வண்ணம் இந்து சமய மாநாடு வருடம் தோறும் கொண்டாடப்பட வேண்டும் [இலட்சியங்களை பொது மக்களுக்கு தெரிவிக்க உதவுவதோடு, இளம் தலைமுறையினரை ஈர்க்கவும், உண்மைத் தொண்டர்களைக் கண்டு பிடிக்கவும் இம் மாநாடுகள் உதவி செய்யும்]

## பல்லாண்டு மகிழ்ந்து பணிசெய்க

அகில இலங்கைக் கம்பன் கழகத் தலைவரும், புங்குடுதீவு அரசினர் மகாவித்தியாலய ஆங்கில ஆசிரியரும், ஆலயமணியின் அணியைச் சேர்ந்தவருமான திருநாவுக்கரசு மகன் திருநந்தகுமார் அவர்களுக்கும் ஞானதுரை மகள் தயாநந்தி அவர்களுக்கும் இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கல்யாண மண்டபத்தில் திருமணம் நிகழ்ந்தது. மந்திரவாக்கும் மங்கள வாத்தியங்களும் மணமக்களையும் மற்றையோரையும் மகிழ்மக்களாக்கின.

ஆலயமணி ஆசிரியர் தலைமையில் நகர்ந்த வாழ்த்துப் பந்தரில் வித்துவான் சபா. ஆனந்தர், வித்துவான் க. ந. வேலன் கலாநிதி. நா சுப்ரமணியன், நீதிபதி யோகசிகாமணி, மல்லிகை ஆசிரியர் டொமினிக்ஜீவா ஆகியோர் வாழ்த்துரையும் கல்வயல் வே. குமாரசாமி. கவிஞர் சோ. பத்மநாதன். காரை செ. சுந்தரம்பிள்ளை ஆகியோர் கவிதை வாழ்த்தும் இடம் பெற்றன. அ இ.க. கழக அமைப்பாளர் இ.ஜெயராஜின் நன்றி மாலையுடன் நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன.

மணமக்கள் பல்லாண்டு மகிழ்ந்து வாழ்ந்து இலக்கிய சமய சமூகப் பணிசெய்ய மீனுட்ஷியோடுறை சோமசுந்தரேசப் பெருமானைச் சிந்தித்து ஆலயமணி வாழ்த்துகின்றது.

( ஆர் )

# ஆலயமணியின் ஓசை

## ஈழத்தின் தனித்துவத் தமிழோசை

— ஆழ்கடலான் —

ஆண்டவன் கோயில் மணியோசை — அது
ஆறுதல் ஆக்கும் தனியோசை
ஈண்டவன் போற்றிடும் மணியோசை அது
இகபர மிரண்டின் தனியோசை

பக்தர்கள் போற்றிடும் மணியோசை — அது
பாமரர் கேட்டிடும் திணியோசை
சித்தர்கள் ஏற்றிடும் மணியோஸ்ச — அது
ஜீவர்கள் ஆட்டிடும் பணியோசை

நீலயம் அடையெனும் மணியோசை அது
நீணிலம் பாய்ந்திடும் அணியோசை
பாலயம் பொழிந்திடும் மணியோசை
பாவலர் ஆய்ந்திடும் பலர்ஓசை

சமயங்கள் இசைத்திடும் மணியோசை — அது
சகலர்க்கும் இசைவான நனியோசை
இமயத்தைத் தாண்டிடும் எழிலோசை — அது
ஈழத்தின் தனித்துவத் தமிழோசை

பதிவுத்தபால்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சித்தாந்த
சைவப் பாதுகாப்புச் சேவை
55/44, கல்லூரி வீதி
யாழ்ப்பாணம்.
5-6-89

களம் ஆசிரியர்,. ஆலயமணி அவர்களுக்கு,
எழுதும் விண்ணப்பம்.

மறு சமயங்கள் மாள எழுதவில்லை;
சைவ சமயம் வாழவே எழுதலானேம்.

ஈழநாடு (04-06-89) இதழில் ஆலயமணி ஒரு கண்ணோட்டம் என்பதில், சித்தாந்த சரபம் க.கணபதிப். பிள்ளையினுல் தொடக்கி வைக்கப்பட்ட "சைவத்தின் மேற்சமயம் வேறில்லை" என்ற விவாதக் கட்டுரை" என்று எழுதப்பட்டுள்ளது. இத்தலைப்பு எம்மால் இடப்பட்டதன்று. ஆசிரியரே இட்டது. கண்ணோட்டரைப் போல வேறு பலரும் நினைப்பார்களல்லவா? ஆதலால் இத்திருத்தம் வெளிவர உடனடியாக ஆவன செய்யும் வண்ணம் வேண்டுகின்றேம்.

அன்றியும் கண்ணோட்டகாரர் "மறு சமயங்கள் மாள" யாம் எழுதியதாகச் சுட்டிக்காட்டியுள்ளார் நமது சைவசமயம் வாழவே எழுதலானேம். இதனைச் சமய குரவர், சந்தான குரவர், நாவலர், மற்றும் பல சைவ அபிமானிகள் வழிநின்று நம் 'சைவப்பாதுகாப்புச் சேவை நெடுங்காலமாகச் செய்து வருகின்றது.

ஆலயமணியிலும் இதனைத் தெளிவு படுத்துக.

இத்துடன் வரும் கடிதத்தைக் குறித்த கண்ணோட்டகாரரின் கண்கள் காணச் செய்யுங்கள்.

வணக்கம், நன்றி.
திருச்சிற்றம்பலம்

இங்ஙனம்
சைவச் சிற்றூழியம் செய்யும்
க. கணபதிப்பிள்ளை
கௌரவ இயக்குநர்

கண்காட்டும் நுதலானும் கனல்காட்டும் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டும் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டும் கொடியானே.

— சம்பந்தர்.

KUGHAN STORES

180, (380) Hospital Road,

JAFFNA.

Alayamani Registered as a News Peper at G. P. O Sri Lanka
JQ 107 /News/89



அடையா நெடுங்கதவின்
அடையாளம்
"ஆலயமணியின்"
ஓசைப்பரம்பல் சண்முகக்கவசமாய்
சுப்பிரபாதமாய் எங்கும்
தங்குவதாகுக!



# P.B. UMBICHY LTD.

*P.O. BOX 846*
No, 28, 4th Cross Street
COLOMBO-11

இச்சஞ்சிகை 28, குமாரசாமி வீதி கந்தர்மடம் யாழ்ப்பாணம் முகவரியில் வாழும் ஆசிரியரும் வெளியிடுபவருமான புலவர் ஈழத்துச் சிவானந்தன் அவர்களால் யாழ்-ஸ்ரீலங்கா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.